பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-7619)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 10 புதன்கிழமை (24.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 188

## நாடு பிளவுபடாத வகையில்
# தமிழர்களுக்கு கோட்டாபய தீர்வு தருவார்



## பிரதமர் மகிந்த உறுதி

(குருநாகல்)

நாடு பிளவுபடாத வகையில் தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்வு தருவார் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் பணத்தை ராஜபக்ஷாக்கள் எடுத்திருக்கலாம்?
– விக்னேஸ்வரன் 23

### முல்லையில்
## கஞ்சாவுடன் இருவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - தண்ணீரூற்றுப் பகுதியில் வைத்து கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக் 23


## 40 பேருக்கு நேற்று கொரோனா
## 2000 ஐ எட்டும் பாதிப்புக்கள்

(கொழும்பு)

இலங்கையில் நேற்று 40 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில், 29 பேர் இந்தியாவின் மும்பையிலிருந்து நாட்டுக்கு வந்த கப்பலில் பணியாற்றுபவர்கள். 11 பேர் அமெரிக்கா 23

### யாழுக்கு வருகிறார்
## சஜித் பிரேமதாஸ



(யாழ்ப்பாணம்)


ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை சந்திப்பதற்காக அவர் இங்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் ஜூலை 23

## க.பொ.த (சா/த)
மாணவர்களுக்கான மத்திய மாகாணத்தின்
## விஞ்ஞான பாட மாதிரி வினாத்தாள்
உள்ளே

## முல்லையில் விபத்து
## இளைஞன் பலி



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதியில் கற்சிலை மடுப் பகுதியில் இடம்பெற்ற 23

## யாழ்.நகரில் விபத்து
## குடும்பஸ்தர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

மினி பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ள தில்குடும்பஸ்தர் 23

### காணாமல் ஆக்கப்பட்ட
## மகனைத் தேடிய தந்தை மரணம்

(வவுனியா)

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிவந்த தந்தை ஒருவர் சுகயீனம் காரணமாக வவுனியாவில் நேற்று உயிரி 23



காணாமல்போன மகன்

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்
## தேர்தல் கடமையிலிருந்து விலகி திங்கள் முதல் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தேர்தல் கடமையிலிருந்து விலகி எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நாடு முழுவதும் வேலைநிறுத்தத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க சுகாதார அமைச் 23

### அரியாலை முள்ளி கடற்கரையில்
## அநுராதபுர மன்னர்களின் மட்பாண்டங்கள் உள்ளன

(யாழ்ப்பாணம்)

அரியாலை முள்ளி கடற்கரைப் பகுதியில் நட்சத்திர விடுதி அமைக்க தெரிவு செய்யப்பட்ட இடத்தில் முற்காலத்தில் அநுராதபுர மன்னர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள் உள்ளன என்று தெரிவித்து அனுமதி கோரியவருக்கு எதிராக தொல்பொருள் திணைக் 23



சமூக இடைவெளியைப் பின்பற்றி சுகாதார நடைமுறைக்கு அமைவாக யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற வாக்குகள் எண்ணும் ஒத்திகை

### விபரீத முடிவெடுத்த
## இளம் யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

மன விரக்தி அடைந்த யுவதி ஒருவர் தனக்குத்தானே தீ மூட்டி தவறான முடிவெடுத்ததில் பரிதாபமாக 23

### இரும்புக்கடை உரிமையாளருக்கு
## கொடிகாமத்தில் வாள்வெட்டு

(கொடிகாமம்)

கொடிகாமம், அல்லாரைப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இரும்புக் கடை உரிமையாளர் ஒருவரே இவ்வாறு வாள்வெட்டிற்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனது விற்பனை நிலையத்திற்கு வந்த பொருட்களை இறக்கிக் கொண்டிருந்த சமயத்தில் அங்கு வந்த 23

## தேர்தல் செலவுக்காக நீதியரசர் விக்னேஸ்வரனை தேடிச் சென்று நிதி வழங்கிய பெரியவர்



(யாழ்ப்பாணம்)

தேர்தல் செலவுக்கு நிதியுதவி செய்யுமாறு தமிழ் மக்களிடம் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் விடுத்த கோரிக்கையை அடுத்து இணுவிலைச் சேர்ந்த எண்பத்தொரு வயதான பெரியார் மகாலிங்கம் அவர்கள் நீதியரசர் விக்னேஸ்வரனின் இல்லத்திற்கு நேரில் சென்று ஒரு இலட்சத்து ஓராயிரம் ரூபாவை அவரிடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இவரின் இச் செயலானது சமூக வலைத்தளங்களில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதேவேளை மகாலிங்கம் அவர்களின் துணைவியார் திருமதி மகாலிங்கம் ஓய்வு பெற்ற ஆசிரியை என்பதுடன் அவர் ஏழை மாணவர்களின் கல்விக்காக அரும்பாடுபடுபவர் என்ற தகவலும் அறியப்பட்டுள்ளது.

இதேவேளை நீதியரசர் சி. வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி மீன் சின்னத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது. (ம-03)

## ஆயாக்கடவையானுக்கு இன்று கும்பாபிஷேகம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய சம்புரோட்சன கும்பாபிஷேக நிகழ்வுகள் இன்று புதன்கிழமை அதிகாலை 05.30 மணி முதல் காலை 07 மணி வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறும்.

இவ்வாலய சம்புரோட்சன கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்க கிரியைகள் கடந்த-21 ஆம் திகதி பிற்பகல் ஆரம்பிக்கப்பட்டுப் புனர் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. இந் நிலையில் இன்று அதிகாலை 05 மணி முதல் கிரியை வழிபாடுகளுடன் தூபி அபிஷேகம் இடம்பெற்று சம்புரோட்சன கும்பாபிஷேகம் நடைபெறும்.

இதேவேளை சேதமடைந்த நிலையில் காணப்பட்ட மேற்படி ஆலயம் ஆதீனகர்த்தாவால் முழுமையாக மறுசீரமைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-03,18,78)




## நயினைத் தாயின் புனிதம் காப்பாற்றப்பட வேண்டும்

### மாவை சேனாதிராசா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் புனிதம் காப்பாற்றப்பட வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைவர மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

மாவையால் வலம்புரிக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே மேற்படி விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாகபூசணி அம்மன் ஆலயத்தின் கொடியேற்ற விழா சென்ற இருபதாம் திகதி இடம்பெற்றது. இக்கோவிலின்கொடியேற்றத் திருவிழாவைத் தொடர்ந்து கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளும் சுகாதாரத் துறையினால் விதிக்கப்பட்டது. அதற்கு ஒத்துழைப்பு வழங்குவது பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் அவசியமானது. அதைக்காரணமாக்கிக் கொண்டு இராணுவத்தரப்பினரும், பொலிஸ் தரப்பினரும் ஆலயததின் புனிதப்பகுதியான ஆதி மூலம் வரையான பகுதிகளுக் குள் சப்பாத்து சீருடையணிந்து அத்துமீறிச் சென்று புனிதக் கேட்டை ஏற்ப டுத்தினார்கள் என்ற செய்தி சைவ மக்களை, பக்தர்களை மன வேதனைப்படுத்தியுள்ளது. இச்செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இச்செயல்களை உறுதிப்படுத்தி 22.06.2020 அன்று பிரதமர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு ஒரு செய்தியை அனுப்பியிருந்தேன். வட மாகாண ஆளுநரிடமும் தொடர்பு கொண்டு பேசியிருந்தேன். இன்று(நேற்று) காலை அரச அதிபரிடமும் பேசி நாக பூசணி அம்மன் ஆலய வளாகத்தின் புனிதத்தை காப்பாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கவும் " பாஸ்" நடைமுறையை நீக்கி பக்தர்களின் தரிசனத்திற்கு இடையூறு இன்றி அனுமதிக்குமாறும் கோரியிருக்கின்றேன்.

சைவ ஆலயங்களில் கொடி யேற்றங்கள் தொடர்ந்து இடம் பெறவிருப்பதால் கொரோனா வைரஸ் தீவிரம் குறைந்திருப்பதால் பக்தர்களின் தரிசனத்திற்கும் பிரார்த்தனைக்கும் பூசைகளுக்கும் தடையின்றி அனுமதி வழங்க பிரதமர், ஆளுநர், பொருத்தமான நடவடிக்கைகளை எடுதது உறுதிப்படுத்தவும் வற்புறுத்தியுள்ளேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)



காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
அறநெறிப் பாடசாலை
நடத்தும்
மாணிக்கவாசகர் குருபூசை விழா

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 26.06.2020 வெள்ளிக்கிழமை
பி.ப 3.00 மணி




மூதறிஞர் கலாநிதி வைத்தீசுவரக்குருக்கள் அரங்கு

நிகழ்ச்சி நிரல்

- தீபாராதனை
- சிந்தனைக்கு ஓர் விருந்து
- திருவாசகத்தேனிசை
  ஈழத்தின் பிரபல பண்ணிசைக் கலைஞர்கள்
- சொற்பொழிவு :- "வான்கருணை"
  வழங்குபவர்
  சிதம்பரஜோதி, தமிழருவி
  காரை த.சிவகுமாரன் அவர்கள்
- நாட்டிய அர்ப்பணம் :- சிவ நிருத்தியார்ப்பணம்
  வழங்குபவர்
  நுண்கலைமாணி
  ஆனந்தகிருஷ்ணன் ஸ்ரீகாந் அவர்கள்

குறிப்பு:- நாட்டில் நிலவும் கொரோனா நோயினைக் கருத்தில் கொண்டு சுகாதார நடைமுறைக்கு அமைய இந்நிகழ்வு நடைபெறவுள்ளது என்பதை அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.

(C-9750)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 18 - 10 - 1957 | 19 - 06 - 2020 |



### ரஞ்சி சத்தியமூர்த்தி

( யாழ். தும்பளை, சிங்கப்பூர், நியூசிலாந்து, அவுஸ்திரேலியா )

யாழ். பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூர், நியூசிலாந்து ஆகிய இடங்களில் கடந்த காலங்களில் வாழ்ந்தவரும் தற்போது மேற்கு அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரை வசிப்பிடமாக கொண்டவருமான திருமதி ரஞ்சி சத்தியமூர்த்தி அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை (19.06.2020) இறைவனடி சேர்ந்தார்.

சத்தியமூர்த்தியின் அன்பு மனைவியும், Dr.யோகராணி - Dr.அல்பிரட் மரியநாயகம் (UK), யோகராஜா-உமா (New Zealand )ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுந்தரமூர்த்தி - அமரர் சிவபாக்கியம் (Srilanka), கணேசமூர்த்தி-ஆனந்தராணி(Canada), புனிதவதி - அமரர் சிவசோதிலிங்கம்(UK), திலகவதி - கனகரத்தினம்(Canada), யோகமூர்த்தி-சியாமளா(UK), கிருஷ்ணமூர்த்தி-வதனி (UK), முருகமூர்த்தி-மாலா(Singapore) மற்றும் அமரர் Dr. விநாயகமூர்த்தி-அமரர் உமாதேவி(UK) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2020) புதன்கிழமை பிற்பகல் 1.00-2.00 மணியளவில் Purslowe & Chipper Funerals 103 Norma Road, Myaree WA 6154 இல் நடைபெற்று பிற்பகல் 2.45 மணிக்கு Central Chapel, Fremental Crematorium இல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-922)

தகவல்:- செல்லையா சத்தியமூர்த்தி

# முகமாலைத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து இப்போது எந்தக் கருத்தையும் வெளியிட முடியாது

## இராணுவத் தளபதி கூறுகிறார்



(கொழும்பு)

**முகமாலைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் குறித்து இப்போது எந்தக் கருத்தையும் வெளியிட முடியாது என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

முகமாலையில் கடந்த சனிக்கிழமை மாலை இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில், மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டார். சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டவர்களுடன் தொடர்புடைய குறித்த இளைஞன், இராணுவத்தினரை மோதிவிட்டு தப்பிச் செல்ல முற்பட்ட போதே, சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பாதுகாப்புத் தரப்பு தகவல் வெளியிட்டிருந்தது.

இந்தச் சம்பவம் குறித்து முழு அளவிலான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே, இராணுவத் தளபதி இந்தச் சம்பவம் குறித்து இப்போது எந்தத் தகவலையும் வெளியிட முடியாது எனவும் முகமாலை துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் இராணுவத்தினரின் விசாரணையும் பொலிஸ் தரப்பின் விசாரணையும் நடந்து வருவதாகவும், எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் இப்போது எதுவுமே கூறமுடியாது என்றும், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# உலகையே கட்டுக்குள் வைத்திருக்கும் கொரோனாவிற்கு எதிரான தடுப்பூசி

## தாய்லாந்தில் சோதனை வெற்றி

(பாங்கொக்)

தாய்லாந்தில் கொரோனா வைரஸிற்கு எதிராக குரங்குகளிடம் நடத்தப்பட்ட தடுப்பூசி சோதனை வெற்றி அடைந்துள்ளது.

உலகையே தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கொரோனா வைரஸ்க்கு எதிராக தடுப்பூசி மற்றும் மருந்துகள் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில் இந்தியா உட்பட பல்வேறு உலக நாடுகள் ஈடுபட்டுள்ளன. இதில் சில நாடுகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளை பெற்று வருகின்றன.

அந்தவகையில் தாய்லாந்து நாடும் கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி ஒன்றை கண்டுபிடித்து உள்ளது. இந்த தடுப்பூசி முதற்கட்டமாக கடந்த மாதம் 23 ஆம் திகதி குரங்குகளுக்கு செலுத்தி சோதிக்கப்பட்டது. சராபுரியில்



உள்ள தேசிய முதல்நிலை ஆய்வு மையத்தில் நடத்தப்பட்ட இந்த சோதனை வெற்றி அடைந்துள்ளது.

தடுப்பூசி போடப்பட்ட குரங்குகள் அனைத்தும் எவ்வித பக்க விளைவுகளும் இன்றி நல்ல நோய் எதிர்ப்பு சக்தியுடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இந்த குரங்குகளுக்கு அடுத்தகட்ட பரிசோதனைக்காக நேற்று 2வது டோஸ் மருந்து ஏற்றப்பட்டது.

இந்த சோதனையும் வெற்றி பெற்றால் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் மனிதர்களுக்கு செலுத்தி பரிசோதிக்கப்படும் என தாய்லாந்து அறிவியல், உயர் கல்வி, ஆய்வுத்துறை அமைச்சர் சுவிட் மாய்சின்சீ தெரிவித்தார். (ஜ-2)

# வாக்களிப்பு நிலையங்களில் பாதுகாப்பை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

இம்முறை பொதுத்தேர்தலில் அடையாளம் காணப்பட்ட சில வாக்களிப்பு நிலையங்களில் மேலதிகமாக பொலிஸ் அதிகாரிகளை பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏனைய தேர்தல்களின் போது, கடமைகளில் ஈடுபடுத்தப்படும் 2 பொலிஸ் அதிகாரிகளுக்கு மேலதிகமாக ஒருவரை ஈடுபடுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கான ஆய்வுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், வாக்கெண்ணும் பணிகள் இடம்பெறும் பகுதிகளுக்கு அருகிலும் தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியை போன்று நடமாடும் பாதுகாப்பு சேவையை அதிகரிக்கவுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்பது தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிப்பதாக தேர்தலுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

ஆலோசனைகளை மீறும் வேட்பாளர்கள் அல்லது கட்சிகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கையை எடுக்குமாறு அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தேர்தலுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# முன்னாள் சபாநாயகர் தலைமையில் அரசியலமைப்புப் பேரவை கூடவுள்ளது

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் நாணயசபை வெற்றிடத்தை நிரப்ப ஜனாதிபதி பரிந்துரைத்துள்ள பெயர்கள் குறித்து ஆராய முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் அரசியலமைப்புப் பேரவை இன்று கூடவுள்ளது.

இலங்கை மத்திய வங்கி நாணயசபையின் இரு அதிகர்ரிகள் வெற்றிடத்திற்கு புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டியுள்ள காரணத்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரு அதிகாரிகளின் பெயர்களை முன்மொழிந்துள்ளார்.

இது குறித்து ஆராயவே அரசியல் அமைப்பு பேரவை கூடவுள்ளது.எட்டாவது பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் இன்று மாலை 6 மணியளவில் சபாநாயகரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் கூடும் இந்த கூட்டத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் எதிர்க்கட்சிதலைவர் சஜித்பிரேமதாஸ, மற்றும் அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-4)

# குணமடைந்தோர் 1548

(கொழும்பு)

நாட்டில் கொவிட் - 19 தொற்றுக்குள்ளானவர்களில் மேலும் 22 பேர் நேற்று குணமடைந்தனர். அதற்கமைய, நாட்டில் குணமடைந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 548 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை ஆயிரத்து 951 ஆக பதிவாகியுள்ளது.

2 நாட்களின் பின்னர் நாட்டில் தொற்றுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டதுடன், மாலைதீவிலிருந்து வந்த ஒருவரே கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 392 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஜ -8)

# சுரக்ஷா காப்புறுதி வேலைத்திட்டத்தின் பிரதி இலாபங்கள் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும்

(கொழும்பு)

சுரக்ஷா மாணவர் காப்புறுதி வேலைத்திட்டத்தின் அடுத்த கட்ட பிரதி இலாபங்கள் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ் வருட மே மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் அமுலுக்கு வரும் வகையில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்களை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் பிரதான காரியாலயத்திற்கோ அல்லது நாடு முழுவதிலுமுள்ள எந்தவொரு கிளைக்குமோ நேரடியாக சென்றோ அல்லது தபால் மூலமாகவோ கையளிக்க முடியும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை அறிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 011 2357357 எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ள முடியுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-8)

# விக்னேஸ்வரனை விமர்சிக்கும் நீங்கள் தமிழ் மக்களுக்கு என்ன செய்தீர்கள்?

## தரவுகள் தரமுடியுமா? சுரேஷ் கேள்விக்கணை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் முன்னாள் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனால் விமர்சிக்கத்தான் முடியும். அவரால் வேறு என்ன செய்ய முடியும் என்ற கேள்வியை எழுப்பியிருந்தார். அவருடைய கேள்விக்கு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பதிலளித்துள்ளார்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அண்மையில் ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தானே விக்னேஸ்வரனை அரசியலுக்குக் கொண்டு வந்ததாகவும் அவரால் கூட்டமைப்பை விமர்சிக்கத்தான் முடியும், மக்களுக்கு அவரால் என்ன செய்ய முடியும் என்ற கேள்வியை எழுப்பி இருந்தார்? அத்துடன் தான் யாரையும் விலக்கவில்லை என்றும் ஏன் அவர்கள் விலகினார்கள் என்பது தனக்குத் தெரியவில்லை என்றும் கூறியுள்ளார்.

கூட்டமைப்பின் தலைவருக்கு தனது கட்சியில் இருந்து பல கட்சிகளும் தனிநபர்களும் ஏன் விலகிப்போகிறார்கள் என்பது தெரியவில்லை என்றால் அவர் கூட்டமைப்பிற்கு தலைமை தாங்கக் கூடியவரா? எனக் கேட்கத் தோன்றுகின்றது.

கூட்டமைப்பிற்குள் இருக்கக் கூடிய ஜனநாயகமற்றதன்மை, கூட்டமைப்பை பதிவு செய்ய மறுத்தமை, பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட பொழுதும் தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறியதுடன், தமக்குக் கிடைத்த சலுகைகளுடன் திருப்திப்பட்டுக் கொண்டமை, புதிய அரசியல் சாசன வரைவில் வடகிழக்கு இணைப்பையோ, வடகிழக்கில் மதசார்பற்ற தன்மையையோ, சமஷ்டி அரசியலமைப்பு முறையையோ வலியுறுத்தத் தவறியமை இப்படிப் பல காரணங்களை அடுக்கிக் கொண்டு போகலாம்.

முன்னாள் முதல்வரை அரசியலுக்கு கொண்டு வந்தவர் சம்பந்தன் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அவரை ஏன் அரசியலுக்கு கொண்டு வந்தார்? அவரை பொம்மை போல் வைத்திருக்கவா? அல்லது அவரது திறமைகளை பாவித்து தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காகவா?

இன்று கூட்டமைப்பை விமர்சிப்பதைத் தவிர விக்னேஸ்வரனால் என்ன செய்ய முடியுமென சம்பந்தன் கேட்கின்றார். நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு நல்லுறவை வைத்திருந்த காலத்தில் தமிழ் மக்களுக்காக நீங்கள் சாதித்தவை என்ன என்பதை தயவு செய்து வெளிப்படுத்துங்கள். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக, அரசியல் கைதிகள் தொடர்பாக, காணிகள் தொடர்பாக என்ன காத்திரமான நகர்வுகள் உங்களால் மேற்கொள்ளப்பட்டன. புதிய அரசியல் சாசனம் 2016 இல் வருகிறது, 2017 இல் வருகிறது, 2018 இல் வருகிறது என்கிறீர்கள். எங்கே



போனது அரசியல் சாசனம்?

இவற்றை விடுங்கள். திருகோணமலையில் கன்னியா வெந்நீரூற்று கிணறுகளையாவது உங்களால் பாதுகாக்க முடிந்ததா? விக்னேஸ்வரனால் என்ன செய்ய முடியுமென கேட்கக் கூடிய தகுதி உங்களுக்கு இருக்கிறதா? என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

---

## கொவிட்-19

### பிரேஸிலில் ஒரு நாளில் மட்டும் உயிரிழப்பு 748, பாதிப்பு 24 ஆயிரம்



(றியோடிஜெனிரோ)

பிரேஸிலில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றினால் நேற்று முன்தினம் மட்டும் 24 ஆயிரத்து 358 பேர் பாதிப்படைந்ததோடு 748 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய அங்கு வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 11 இலட்சத்து 11 ஆயிரத்து 348 ஆக உள்ளது. மேலும் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 51 ஆயிரத்து 407 ஆக உள்ளது.

பிரேஸிலில் தேசிய அளவில் பொது முடக்கம் அமுல்படுத்தப்படவில்லை. மாகாணங்கள், நகரங்களின் தேவைக்கு ஏற்றாற்போல சமூக முடக்கத்தையும் பிற கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளன.

இப்போது மெல்ல அவையும் தளர்த்தப்பட்டு வருகின்றன. ஆனால் அங்கு கொரோனா பாதிப்பின் எண்ணிக்கை ஏறுமுகமாகவே உள்ளது. (2)

---

## ஓகஸ்ட் மாத விடுமுறை இரத்து

### கல்வியமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

**பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் வழங்கப்படும் விடுமுறையை இரத்துச் செய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.**

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை செப்டெம்பர் மாதம் வரையில் பிற்போடப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே ஓகஸ்ட் மாதத்தில் வழங்கப்படும் பாடசாலை விடுமுறையை இரத்து செய்வதற்கு தீர்மானித்ததாக கல்வியமைச்சின் செயலாளர் என்.எம்.எம்.சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

மேலும் கல்விப் பொதுதராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி நடத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதேவேளை எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் பல கட்டங்களாக பாடசாலைகளை மீண்டும் திறக்கவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

அதன்படி 10, 12 மற்றும் ஐந்தாம் தர வகுப்புகளுக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி முதல் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4-8)

---

# தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே

## கோவிந்தன் கருணாகரம்

(கொழும்பு)

தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்வியடைந்தால் அது தமிழர்களின் தோல்வியாகவே கருதப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டக்களப்பில் நான்கு ஆசனங்களைப் பெற வேண்டிய தேவை இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதிலிருந்து தமிழ் மக்களின் அரசியல் குரலாக தமிழ் மக்களின் தேவைக்காக இன்றுவரை பல வழிகளிலும் போராடிக்கொண்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களை தட்டிக் கேட்பதற்கும் அதற்கொரு நிரந்தரத் தீர்வை உருவாக்குவதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேரம் பேசும் சக்தியாக வடகிழக்கில் திகழ வேண்டிய தேவை இருக்கின்றது.

தமிழ் மக்கள் எதிர்காலத்தில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு தீர்வைப் பெற்று தலைநிமிர்ந்து வாழவேண்டுமானால் தமிழ்த் தேசியம் வெல்ல வேண்டும். தமிழ் மக்கள் வெல்ல வேண்டுமானால் தமிழ்த் தேசியக் கூட்ட



மைப்பு வெல்ல வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுகின்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் வென்று வடக்கு, கிழக்கில் 20 ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்ற வேண்டும். அதற்கு தமிழ் மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் குறிப்பாக மட்டக்களப்பு தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஒருமித்து வாக்களித்து நான்கு பாராளுமன்றப் பிரதிநிதிகளைப் பெற்றுத் தரவேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# இராசிபலன்

24.06.2020
ஆனி 10, புதன்கிழமை
திருதியை மு.ப 10.43 மணிவரை
பூசம் பி.ப 1.54 மணிவரை
சுபநேரம் 4.25-5.25 மணிவரை
இராகுகாலம் 11.55-1.25 மணிவரை
சந்திராஷ்டமம்- பூராடம், உத்தராடம்
சதுர்த்தி விரதம் வளவன்


மேஷம்

கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உறவினர்களின் வருகையுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


ரிஷபம்

நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


மிதுனம்

நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் வாய்ப்புண்டு, நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.


கடகம்

விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.


சிம்மம்

பிறரது பொறுப்புக்களையும் பொறுப்பேற்பதால் மனச்சஞ்சலங்கள் கூடும், திடீர் பயணங்கள் ஏற்படலாம், கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும்.


கன்னி

இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், செல்வநிலை உயரும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.


துலாம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் செய்திக்ள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.


விருச்சிகம்

சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், உறவினர்களின் வருகையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.


தனுசு

மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, தேவையற்ற மஸ்தாபங்கள் ஏற்படலாம்.


மகரம்

சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.


கும்பம்

கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


மீனம்

தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

நன்கு அறிந்து கொள்வதே நம்பிக்கையிலும் சிறந்தது.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# நாட்டிற்கு பாரிய துரோகத்தை எனது மகள் இழைத்துவிட்டார்

## பெண் தற்கொலைதாரியின் தாய் சாட்சியம்

(கொழும்பு)

**நாட்டிற்கு பாரிய துரோகத்தை எனது மகள் இழைத்து விட்டாரென தெமட்டகொட மகாவில கார்டனில் தன்னை வெடிக்கவைத்து உயிரிழந்த பெண் தற்கொலைதாரியான பாத்திமா ஜிவ்ரியின் தாயார் கவலை வெளியிட்டுள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற ஜனாதிபதி ஆணைக் குழுவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னிலையாகி சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "எனது மகளிற்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். அத்துடன் உயிரிழந்த வேளை அவர் கர்ப்பிணியாக இருந்தார்.

மேலும் சங்கிரில்லா- ஹோட்டலில் தாக்குதலை மேற்கொண்ட தற்கொலை குண்டுதாரி இல்ஹாம் அஹமட்டினை எனது மகள் எப்போது மணமுடித்தார் என்பது எனக்கு ஞாபகமில்லை. ஆனால், அவர் 6 வருடங்களுக்கு முன்பாக திருமணம் செய்திருக்கலாம் என நினைக்கின்றேன்.

வெடிப்புச் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் எனது மகள் தொலைபேசியில் எனக்கு அழைப்பை ஏற்படுத்தி உடனடியாக வீட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து நான் எனது மகளை பார்ப்பதற்காக அங்கு சென்றேன். பின்னர் என்ன நடந்தது எனக் கேட்டேன். அதற்கு எனது மகள், தனது கணவர் வீட்டிற்கு வந்து பிள்ளைகளைக் கட்டியணைத்து அழுதார் என தெரிவித்து கதறி அழுததுடன் வேறெதுவும் கூறவில்லை எனவும் தாய் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# பொத்துவில் விகாரைக் காணி அளவீட்டுப் பணிகளை தேர்தல் வரை நடத்தக்கூடாது

## நீதிமன்றம் உத்தரவு

(முல்லைத்தீவு)

பொத்துவில், முகுது மஹா விகாரைக்கான காணி அளவீட்டுப் பணிகளை பாராளுமன்றத் தேர்தல் நிறைவடையும் வரை இடைநிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

பொத்துவில் பிரதேசத்தின் முகுது மஹா விகாரைக்கான காணி தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையையடுத்து தொல்லியல் ஆய்வுத் திணைக்களத்தினால் பொத்துவில் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதவான் எம்.எச்.முஹம்மட் றாபி இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்போது, இக் காணி தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமும் தொல்லியல் ஆய்வுத் திணைக்களத்தினால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் படியும் 30 ஏக்கர் காணியை மாத்திரமே அளவீடு செய்வதற்கு அத்திணைக்களத்திற்கு அதிகாரமுள்ளதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், அதனை அளவீடு செய்த பின்னர் அது தொடர்பிலான அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும் இந்த 30 ஏக்கர் காணிக்குள் கட்டடம் அமைப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 13 குடியிருப்பாளர்களும் இல்லையென்று ஊர்ஜிதமாகும் பட்சத்தில் அவர்கள் தமது இடங்களில் கட்டட நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் வாதிட்டார்.

இந்த வழக்கைப் பொறுத்த வரையில் தொல்லியல் ஆய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்களோ பொலிஸாரோ அந்த இடத்திற்குச் சென்று, மக்களுக்கு மத்தியில் தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாட்டை இத் தேர்தல் காலம் முடியும் வரை செய்யக்கூடாதென்றும் அவர் அழுத்தமாக கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக் கொண்ட நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார். (ஜ-4)


31ஆம் நாள்

# நினைவு அஞ்சலி

அமரர்

## திருமதி நடராசா இந்துமதி

(பிரான்ஸ்)



அன்னை மடியில்: 24.04.1938
ஆண்டவன் அடியில்: 25.05.2020

யாழ். அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் செட்டிய குறிச்சி பூநகரியை வசிப்பிடமாகவும் கொண்ட **அமரர் நடராசா இந்துமதியின்** 31 ஆம் நாள் நினைவு நிகழ்வு இன்று 24.06.2020 புதன் கிழமை பிரான்ஸில் நடைபெறுகிறது.

அன்னாருக்கு எமது குடும்பம் சார்பில் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா இறைவனடி சேர்ந்து நித்தியப் பேரொளியில் கலக்க இறைவனை வேண்டுகின்றோம்.

**பிள்ளையினார் சண்முகலிங்கம்- பெறாமகன்**
**மனைவி, பிள்ளைகள்**
**தம்பிராய், பூநகரி.**

# யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு

# தொற்றுநீக்கம் செய்ய நாம் தயார்-பதில் முதல்வர் ஈசன்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு தொற்று நீக்கம் செய்துதர மாநகர சபை தயாராக உள்ளது என யாழ்.மாநகர சபையின் பதில் முதல்வர் து.ஈசன் தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில், கொவிட்-19 வைரஸ் தாக்கம் காரணமாக அனைத்துப் பாடசாலைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எனினும் பாடசாலைகள் அனைத்தும் இம்மாத இறுதியில் மீள ஆரம்பிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

இந்நிலையில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பாடசாலைகள் துப்புரவு செய்யப்பட்டு தொற்று நீக்கம் செய்ய வேண்டியுள்ளது.

எனவே யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பாடசாலைகளில் தொற்று நீக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள யாழ்.மாநகரசபை தயாராக உள்ளது.


எனவே பாடசாலை அதிபர்கள் தமது கோரிக்கைகளை மாநகர முதல்வருக்கு எழுத்து மூலமாக எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

தமது பாடசாலைகளுக்கு தொற்று நீக்கல் மேற்கொள்ள வேண்டுமாயின் விண்ணப்பிக்கின்ற ஒவ்வொரு பாடசாலையும் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தமது பாடசாலைகளை துப்புரவு செய்து வைத்திருக்க வேண்டியது மிக முக்கியமான விடயமாகும்.

துப்புரவு செய்யப்படாத பாடசாலைகளில் கிருமித் தொற்று நீக்கம் மேற்கொள்வது சிரமமாகும்.

கிருமித் தொற்று நீக்கலுக்காக விண்ணப்பிக்கின்ற பாடசாலைகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒழுங்கில் பதிவு செய்யப்பட்டு தொற்று நீக்கல் மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு யாழ்.மாநகர முதல்வர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என யாழ்.மாநகர சபை பதில் முதல்வர் து.ஈசன் அறிவித்துள்ளார். (4-5)



யாழ்ப்பாணம் கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படங்கள்:- இருபாலை செய்தியாளர்)

# வெள்ளநீர் வாய்க்காலை புனரமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில்-நந்தாவில் பகுதியிலுள்ள வெள்ள நீர் வழிந்தோடும் வாய்க்காலை புனரமைத்துத் தருமாறு நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் கு.மதுசுதன், நீர்ப்பாசன வடிகாலமைப்பு சபையிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

இவ்விடயம் தொடர்பில் கோண்டாவில்-நந்தாவில் பகுதியிலுள்ள வெள்ள நீர் வழிந்தோடும் இவ் வாய்க்கால் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் தூர்வடைந்து காணப்படுகிறது.

மழைகாலங்களில் தேங்கும் மழை வெள்ளம் வழிந்தோட வழியின்றி தெருக்களிலும் வீட்டு வளவுகளிலும் தேக்கமடையும் நிலையுள்ளது.

எனவே இதற்கான தீர்வாக குறித்த வாய்க்காலை புனரமைப்பு செய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-5-8)

# யாழ்.மாவட்ட செயலகத்தில் வாக்கு எண்ணும் ஒத்திகை

(யாழ்ப்பாணம்)

2020 பொதுத் தேர்தலுக்கான வாக்குகள் எண்ணும் ஒத்திகை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் இந்த வாக்கு எண்ணும் ஒத்திகை நடைபெற்றது.

கொவிட் -19 நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் சுகாதார அமைச்சின் கட்டுப்பாடுகளைப் பின்பற்றி பொதுத் தேர்தல் வாக்குகளை எண்ணும் பணியை முன்னெடுப்பது பற்றி இந்த ஒத்திகை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் ஒத்திகை ஆரம்பமாகியது. இதேவேளை, வாக்கெடுப்பு ஒத்திகை கடந்த வாரம் நாவாந்துறையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (4-5)



யாழ்.போதனா வைத்தியசாலையில் கொவிட்-19 சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களைப் பாராட்டி கல்வியங்காடு நொதேன் விளையாட்டுக் கழகத்தினர் சுமார் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சத்துணவுப் பொருட்கள், சுகாதாரப் பொருட்கள் உள்ளடங்கலான பொதிகளை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தியிடம் கையளித்தனர்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 50 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 140 | 120 |
| தக்காளி | 240 | 240 | 240 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 80 |
| கோவா | 150 | 130 | 130 | 140 |
| கரட் | 120 | 180 | 200 | 200 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 60 | 60 | 100 |
| வாழைக்காய் | 100 | 80 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 240 | 200 | 300 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 200 | 250 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 130 | 120 | 100 |
| பயற்றங்காய் | 140 | 150 | 200 | 120 |
| லீக்ஸ் | 150 | 150 | 120 | 160 |
| பீற்றூட் | 120 | 150 | 220 | 120 |
| கறிமிளகாய் | 150 | 80 | 160 | 240 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 160 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 50 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 40 | 20 |
| தேசிக்காய் | 400 | 400 | 380-400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 | 280 |
| வெங்காயப்பூ | 220 | 250 | 300 | -- |
| முள்ளங்கி | 100 | 80 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 70 | 50 | 60 |

# இணையத்தளம் ஊடாக பணமோசடி நான்கு வெளிநாட்டவர்கள் கைது

(கொழும்பு)

நாட்டில் இணையத்தளத்தின் ஊடாக பல்வேறு நபர்களிடம் பண மோசடி செய்த நான்கு வெளிநாட்டவர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கல்கிஸை நீதிமன்றத்திற்கு அருகில் வைத்து குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சீட்டிழுப்பின்மூலம்பரிசு வென்றுள்ளதாக தெரிவித்து குறித்த நபர்கள் இணையத் தளத்தின் ஊடாக பணம் பெற்றுள்ளனர்.

நைஜீரியா பிரஜைகள் மூவரோடு உகண்டா நாட்டு பிரஜை ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து 15 கடனட்டைகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றினர். (ஜ-4)

# மிலேனியம் சவால்கள் உடன்படிக்கை குறித்து அரசாங்கம் தொடர்ந்தும் பரிசீலித்து வருகின்றது

## அமெரிக்கத் தூதரகம் தகவல்

(கொழும்பு)

மிலேனியம் சவால்கள் உடன்படிக்கை குறித்து இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் ஆராய்ந்துவருவதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட உடன்படிக்கை இலங்கைக்கு பாதகமானது என குறித்த உடன்படிக்கை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் நேற்று முன்தினம் தெரிவித்த நிலையிலேயே அமெரிக்க தூதரக அதிகாரியொருவர் ஆங்கில ஊடகமொன்றிற்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் 480 மில்லியன் அமெரிக்க டொலர் திட்டம் குறித்து அரசாங்கத்திடமே அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை கேட்கவேண்டும் என தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடனான மிலேனியம் சவால்கள் ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடாது என அமைச்சரவை பேச்சாளர்களில் ஒருவரான ரமேஷ் பத்திரண கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தபால் மூலம் வாக்களிப்பு 47 ஆயிரத்திற்கு அதிகமான விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பிற்குரிய விண்ணப்பங்களில் 47 ஆயிரத்து 430 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் ஜூலை மாதம் 14,15,16 மற்றும் 17 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# களனி பல்கலை. மாணவர்கள் கைது

(கொழும்பு)

களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களனி பல்கலைக்கழக வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராக்களை நீக்கியமை தொடர்பிலேயே பல்கலைக்கழக மாணவர்கள் 9 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவ்வாறு குறித்த 9 மாணவர்களும் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# போதைப்பொருள் ஒழிப்புத்திட்டத்தை தடுக்கவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டது

## முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்தை முடக்கவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டதென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டினார்.

ஹிங்குராங்கொட தேர்தல் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் அணியின் மாநாட்டில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எனது ஆட்சிக்காலத்திலேயே போதைப்பொருள் ஒழிப்புச் செயற்பாடுகள் வலுவாக இடம்பெற்றன.

அவற்றை தடுப்பதற்காகவே நான் மரண தண்டனையை அமுல்படுத்த முன்வந்திருந்தேன். போதைப்பொருள் வியாபாரிகளே அதற்கு எதிராக நீதிமன்றம் சென்றிருந்தனர். அவ்வாறான சூழ்நிலைக்கு முகம்கொடுத்த முதலாவது ஜனாதிபதியாக நானே உள்ளேன்.

மாகந்துரே மதூஷ் போன்ற பாதாளக் குழுவின் முக்கிய உறுப்பினர்களை



கைது செய்தமையால் என்னை கொலை செய்வதற்கான பாதாளக் குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அன்றுபோலவே இன்றும் தொடர்கின்றன.

அத்தோடு, நான் பொலநறுவையை மீள உயிர்ப்பித்துள்ளேன். அங்குள்ள அபிவிருத்திச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க எனக்கான அதிகாரத்தை பெற்றுத்தர வேண்டுமெனவும் அவர் மேலும் கோரிக்கை விடுத்தார். (ஜ-8)

# கொரோனாத் தொற்றால் தடைப்பட்டது கலாசார விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையினரால் பிரதேச மட்டத்தில் நடத்தப்படவிருந்த கலாசார விழா கொரோனா அச்ச நிலைமை காரணமாக தடைப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் கலை விடயங்களை ஊக்குவிக்கவென இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கிடப்பட்டது.

குறித்த கலாசார விழாவில் பிரதேச மட்ட கல்வி, விளையாட்டுச் சாதனையாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2020ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலும் கலை சார்ந்த விடயத்திற்கான நிதி ஒதுக்கீட்டை இணைத்து வருடா வருடம் கலாசார விழாவினை சிறப்பாக நடத்த முடியும் என உறுப்பினர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

குறித்த கலாசார விழாவினை நடத்துவதற்கு மாகாண ஆளுநர் பிரதேச சபைக்கு கொரோனா அச்ச நிலைமைக்கு முன்னர் அனுமதி வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-5-30)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா: 32 ¾ செவ் 9 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: படித்த அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/10843

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 3
கி.பா: - செவ் 11 இல்
உயரம்: 6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10845

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 3
கி.பா: 30 ¼ செவ் 5 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: பட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம். சைவபோசனம்
தொ.இ: B/10848

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: செவ் 10 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் க.பொ.த.உ.த. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: நிரந்தர அரச தொழில்
தொ.இ: B/10849

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 28½ செவ் 6 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. தனியார் வேலை
எதிர்பார்ப்பு: படித்த தகுந்த மணமகன்.
தொ.இ: G/10886

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா: 44 ¾ சூரி,செவ் 10 இல்
உயரம்: 148cm
தகைமை/தொழில்: MBBS, வைத்தியர்.
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், விஞ்ஞானபீட நிரந்தர விரிவுரையாளர்.
தொ.இ: G/10888

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: சூரி,செவ் 11 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: National Diploma in Teaching. ஆசிரியர்
எதிர்பார்ப்பு: உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/10889

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: - சூரி, செவ் 2 இல்
உயரம்: 5"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. கடையில் வேலை செய்கின்றார்.
எதிர்பார்ப்பு:- வெளிநாடு மட்டும். கனடா, சுவிஸ் விரும்பத்தக்கது.
தொ.இ: G/10892

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இயற்கை அரண்கள் அமைப்பில் இணையக் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

இயற்கை வளங்கள் அதிகமாகக் காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இயற்கை வளங்களை அழிக்கும் செயற்பாடுகள் அதிகமாக இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் முகமாகவும் சூழல் சமநிலையைப் பேணும் முகமாகவும் இயற்கையுடன் ஆர்வம் கொண்ட தன்னார்வ இளைஞர்கள் இயற்கை அரண்கள் என்னும் அமைப்பு ஒன்றை அணமையில் ஆரம்பித்துள்ளனர்.

இந்த இளைஞர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய இயற்கை அரண்கள் அமைப்பானது கடந்த 14 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் முதலாவது சிரமதானப் பணியை ஆரம்பித்தது.

அதனை தொடர்ந்து கடந்த 21 ஆம் திகதி முல்லைத்தீவு நகர கடற்கரையில் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது சுற்றுலாப் பயணிகள் மற்றும் முல்லை. மாவட்ட மக்களின் பொழுது போக்கு இடமாகவும் இக்கடற்கரை அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் அடுத்த சிரமதானப் பணி எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வட்டுவாகல் பாடசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயற்கை அழிவுகளுக்கு எதிராகவும் இயற்கையைப் பாதுகாப்பதற்கும் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பில் இணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தை இயற்கை வளங்களுடன் பசுமை நிறைந்த ஒரு மாவட்டமாக மாற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது. (4-5)

# தேசிய லொத்தர் சபையின் அதிர்ஷ்டசாலிகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் மெகாபவர் சீட்டு இலக்கம் 0491 இல் விற்பனை முகவர் பூபாலசிங்கம் ஊடாக நபரொருவருக்கு 10 இலட்சம் ரூபாய் வெல்லப்பட்டதுடன் அவருக்கான பணத்தொகையும் வழங்கப்பட்டது.

அதேபோன்று ஜாதிகாம்பத சீட்டு இலக்கம் 1022 இல் விற்பனை முகவர் நடராசா வசீகர் ஊடாக நபரொருவருக்கு 20 இலட்சம் ரூபாய் வெல்லப்பட்டதுடன் அவர்களுக்கான பணத்தொகையும் வழங்கப்பட்டது. (4-5)

# தேர்தலில் சுகாதார நடைமுறைகள்; கிளி.செயலகத்தில் கலந்துரையாடல்



(கண்டாவளை)

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தேர்தலின் போது உரிய சுகாதார நடைமுறைகளை வேட்பாளர்கள் பின்பற்ற வேண்டும் என்பது தொடர்பிலும் கட்சி கூட்டங்களின் போது சமூக இடைவெளி பின்பற்றப்படுதல் என்பன தொடர்பிலும் அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என்று சுகாதார திணைக்கள அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டது.

அதேபோன்று பொலிஸாரும் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது.

இக் கலந்துரையாடல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாரத் துறை உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (4-5-315)



**முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 144 பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர்கள் நல்லாட்சி அரசாங்கத்தினால் 16.09.2019 அன்று பணி நியமனம் கிடைக்கப் பெற்று பதவிகளைப் பொறுப்பேற்றுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் 23.09.2019 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுத் தலைவரால் 18.11.2019 வரை குறித்த நியமனங்கள் இடை நிறுத்த சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டு பணி இடை நிறுத்தப்பட்டது. அந்நியமனத்தை வழங்கக்கோரி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான மனுவை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனிடம் கையளித்தனர்.**

# இடைப்போக பயிர்ச் செய்கைக்கும் இரணைமடுக்குளத்து நீர் வழங்கத் தீர்மானம்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீரைப் பயன்படுத்தி இடைப்போகமாக 710 ஏக்கர் நிலப்பரப்பில் உபஉணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கிளிநொச்சி கோரக்கன் கட்டு மற்றும் பரந்தன் ஆகிய பிரதேசங்களில் இரணைமடுக் குளத்தின் நீரைப்பயன்படுத்தி இடைப்போகப்பயிர்ச்செய்கை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் பரந்தன் பொது நோக்கு மண்டபத்தில் மாவட்டச் செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி இரணை மடுக் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இப்பயிர் செய்கைக்கான முழுமையான நீர்விநியோகம் வழங்கப்பட்டு குளத்தில் தற்போதிருக்கின்ற நீரில் இடைப்போகமாக உப உணவுச்செய்கைக்கு நீர் வழங்கும் பொருட்டு மேற்படி கலந்துரையாடல் நடைபெற்றது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின்கீழ் உள்ள பரந்தன் கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் கோரக்கன்கட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் 700 ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்து, பயறு, கௌபி போன்ற பயிர்களைப் பயிரிடுமாறும் பத்து ஏக்கர் நிலப்பரப்பில் கால்நடைத்தீவனமாக பயன்படுத்தும் புல் பயிரிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதி நீர்ப்பாசனப்பொறியியலாளர் மற்றும் இரணைமடு நீர்ப்பாசனப் பொறியியலாளர் உத்தியோகத்தர், பரந்தன் கோரக்கன் கட்டு கிராம உத்தியோகத்தர்கள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் ,விவசாயிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (4-5-315)


## காசாளர்,ஆசிரியர்கள் தேவை

சுழிபுரம் பிரதேசத்தில் கடந்த பல வருடங்களாக இயங்கி வரும் தனியார் கல்வி நிலையத்திற்கு பெண் காசாளர், தரம் 6-8 வரை கற்பிக்கக்கூடிய பெண் ஆசிரியர்கள் அவசரமாகத் தேவை.

சுழிபுரம், பண்ணாகம், மூளாய் பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டும் தங்கள் சுயவிபரத்தை +94761054781 எனும் **Viber இலக்கத்திற்கோ or James bstn@gmail.com** எனும் மின் அஞ்சலுக்கோ அனுப்பி வைக்கவும்.

**நிர்வாகி: 0714411592**

(3088)


# இலவச இணையவழி கருத்தரங்கு

(கொழும்பு)

பங்குச்சந்தையில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வம் காட்டும் முதலீட்டாளர்கள் மத்தியில் பங்குச் சந்தை தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினால் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை Zoom ஊடான இலவச இணையவழிக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

எனவே ஆர்வமுள்ளோர் இதற்கான பதிவினை www.cse.lk என்ற இணையத்தள முகவரியூடாக மேற்கொள்ள முடியும் எனவும் மேலதிக தகவல்களுக்கு 077 725 1737 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5)


பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்


(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9743)

**ரெங்கசாமி** கண்டி, அம்பத்தன்ன - **077 112 3471** Viber - 076 466 4153 வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# வடமாகாணத்தில் அரச திணைக்களங்களினால் காணிகள் கையடக்கலும் மக்களின் காணிப் பிரச்சினையும் - ஒரு பார்வை

08

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**கேள்வி:-** அப்படியாயின் மேற்கூறப்பட்ட சிறு காடுகள் அரச காணிகள் என்று நிர்ணயிக்கப்பட்டு விட்டதா?

**பதில்:-** காணி நிர்ணயம் சம்பந்தமாக இலங்கையில் மூன்று வகையான பிரதேசங்கள் இருக்கின்றன. அவையாவன,

1. காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தால் காணி உரித்துக்கள் (அரச காணிகள், தனியார் காணிகளென) நிர்ணயம் செய்வதற்கு எடுக்கப்பட்டு காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தினால் உரித்துக்கள் நிர்ணயம் செய்து முடிக்கப்பட்ட பிரதேசம்.

2. காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தால் காணி (அரச காணிகள், தனியார் காணிகளென) உரித்துக்கள் நிர்ணயம் செய்வதற்கு எடுக்கப்பட்டு காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தினால் இதுவரையில் உரித்துக்கள் நிர்ணயம் செய்து முடிக்கப்படாத பிரதேசம். (உதாரணம் சுண்டிக்குளம் பிரதேசம்).

3. காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தால் காணி (அரச காணிகள், தனியார் காணிகளென) உரித்துக்கள் நிர்ணயம் செய்வதற்கு எடுக்கப்படாத பிரதேசம். இக்காணிகளை உரித்துக்கள் நிர்ணயம் செய்வதற்கு எடுக்காமல் விட்டதற்குக் காரணம் இப்பிரதேசத்தில் அரச காணிகள் மிகக் குறைவாகக் காணப்பட்டதேயாகும். யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த அளவில் கிட்டத்தட்ட முழுப்பிரதேசமும் உரித்துக்கள் நிர்ணயம் செய்ய எடுக்கப்படாத பிரதேசமாக இருப்பதைக் காணலாம். காராணம் இங்கு தனியார் காணிகளே அதிகம்.


மேற்கூறப்பட்ட சிறு (கிராமக்) காடுகள் மேற்கூறப்பட்ட வகைகளில் ஏதாவது ஒன்றுக்குள் வரலாம். இக்காடுகள் சம்பந்தமான தகவல்கள் (எல்லையிட்டு) நிர்ணயம் செய்யப்படாவிட்டாலும் பொதுவாக பிரதேச செயலாளரின் கட்டுப்பாட்டிலோ அல்லது வனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலோ இருக்கும்.

இலங்கையில் காணி (அரச காணிகள், தனியார் காணிகளென) நிர்ணயம் செய்வதற்கு எடுக்கப்பட்ட பிரதேசத்தை படம் 1 காட்டுகின்றது. இப்படத்தில் கோடிட்ட பகுதிகள் நிர்ணயம் செய்வதற்கு எடுக்கப்பட்ட மற்றும் நிர்ணயம் செய்து முடிக்கப்பட்ட பிரதேசங்களைக் காட்டுகிறது. இலங்கையின் 20% மான பிரதேசம் காணி (அரச காணிகள், தனியார் காணிகளென) நிர்ணயம் செய்வதற்கு எடுக்கப்படாத (படத்தில் கோடிடப்படாத) பிரதேசமாகும் (வகை-3).

காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தால் காணி (அரச காணிகள், தனியார் காணிகளென) உரித்துக்கள் நிர்ணயம் செய்வதற்கு எடுக்கப்பட்ட **80%** வீதமான பிரதேசத்தில் **5%-10%** வீதமான பிரதேசத்தின் காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தினால் இதுவரையில் நிர்ணயம் செய்து முடிக்கப்படாமல் உள்ளது (வகை-2). மேலும் உரித்துக்கள் நிர்ணயத்திற்கு எடுக்கப்பட்ட மிகவும் சிறிய பிரதேசங்கள் படம் 5 இல் காட்டப்படவில்லை.

**கேள்வி:-** படத்தைப் பார்க்கும்போது யாழ்.மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி, சுண்டிக்குளம் பகுதி காணி உரித்துக்கள் நிர்ணயம் செய்வதற்கு எடுக்கப்பட்ட பிரதேசமாகக் காட்டப்பட்டுள்ளது. அப்பிரதேசத்தில் உள்ள காணிகளின் உரித்துக்கள் நிர்ணயம் செய்து முடிக்கப்பட்டுள்ளதா?

**பதில்:-** பொதுவாக இல்லையென்றே கூறமுடியும். இப்பிரதேசம் காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தால் காணி உரித்துக்கள் நிர்ணயம் செய்வதற்கு




எடுக்கப்பட்டு காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தினால் இதுவரையில் உரித்துக்கள் நிர்ணயம் செய்து முடிக்கப்படாத பிரதேசம் ஆகும். இப்பகுதிகள் 1958 ஆம் மற்றும் 1969 ஆம் ஆண்டுகளில் காணிகளின் உரித்துக்கள் நிர்ணயம் செய்ய எடுக்கப்பட்ட பிரதேசங்களாகும். நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக காணிகளின் உரித்துக்கள் நிர்ணயம் செய்து முடிக்கப்பட்டு வெளியிடப்படும் இறுதிக் கட்டளை **(final order)** இன்னமும் வெளியிடப்படவில்லை. இதில் ஒருபகுதிக் காணிகளின் உரித்துக்கள் நிர்ணயம் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. படம்-6 ஐப் பார்த்தீர்களானால் **FVP 91** என்று குறிப்பிட்ட பகுதிகள் காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தினால் உரித்துக்கள் நிர்ணயம் செய்து முடிக்கப்பட்ட பிரதேசமாகும்.


மற்றைய பகுதிகளான **VP 77, VP78, VP79, Topo.PP 41** பிரதேசங்கள் காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தினால் இதுவரையில் உரித்துக்கள் நிர்ணயம் செய்து முடிக்கப்படாத பிரதேசமாகும். அதாவது இதில் எது அரச காணி எது தனியார் காணி என்பது இதுவரையில் அரசினால் அடையாளம் காணப்படவில்லை.

**கேள்வி:-**இவ்வாறன தகவல்களை யாரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்?

**பதில்:-** காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்திடமிருந்து அல்லது நில அளவைத் திணைக்களத்திடமிருந்து பெற முடியும்.

**கேள்வி:-** சுண்டிக்குளம் பகுதி காணி உரித்துக்கள் நிர்ணயம் செய்வதற்கு எடுக்கப்பட்ட பிரதேசமாகக் காட்டப்பட்டுள்ளது. அப்பிரதேசம் உரித்துக்கள் நிர்ணயம் செய்து முடிக்கப்படவில்லை என்று கூறப்பட்டால் அது எவ்வாறு சரணாலயம் என்று கூறப்படுகிறது?

**பதில்:-** வனஜீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பிற்கான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 1938 ஆம் ஆண்டு பெப்ரவரி 25 ஆம் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் சுண்டிக் குளத்தின் ஒரு பகுதி (25,550 ஏக்கர்) "சுண்டிக்குளம் சரணாலயம்" எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. அப்பிரதேசம் தனியார் காணியா? அல்லது அரச காணியா? என்ற தேவையேற்படவில்லை. வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளே சரணாலயங்களாகும். சரணாலயம் ஒன்று தனியார் நிலங்களையும் சொத்துக்களையும் கொண்டிருக்கலாம். எனினும் அப்பகுதியிலுள்ள வனவிலங்குகள் சார்ந்த பொறுப்பும் அதிகாரமும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்திற்குரியதாகும். பொதுமக்கள் இச் சரணாலயங்களுக்குள் அனுமதியின்றி நுழைய முடியும். ஆனால் அத்தகைய சரணாலயங்களுள் வாழும் வனவிலங்குகளிற்கு ஊறுவிளைவிப்பது சட்டவிரோதமானதாகும். அதனால் சரணாலயமாக எனப் பிரகடனப்படுத்தப்பட்டதில் எவ்வித பிழையுமில்லை.




(தொடரும்...)

# பாரதம்

# விரைவில் தயாராகிறது ஜேர்மனின் வைரஸ் தடுப்பூசி

(பெர்லின்)

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த 'க்யூர்வேக்' (CureVac) என்ற நிறுவனம் கொரோனா சிகிச்சைக்கான தடுப்பூசியை உருவாக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.


டியூபிங்கன் பல்கலைக்கழக வைத்தியசாலையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் பீட்டர் கிரம்ஸ்னர் தலைமையில் இந்த ஆராய்ச்சி இடம்பெற்று வருகின்றது.

இந்த தடுப்பூசியை உருவாக்கும் பணி இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

இதை முதலில் பரிசோதித்துப் பார்ப்பதற்காக, ஜேர்மன் மற்றும் பெல்ஜியத்தில் இருந்து மொத்தம் 144 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இன்னும் 2 மாதங்களில் அவர்களிடம் பரிசோதனை நடத்தப்பட்டு, முடிவுகள் வெளியிடப்படும்.

பரிசோதனைக்குப் பின்னர் அடுத்த ஆண்டில் இந்த தடுப்பூசிக்கு அங்கீகாரம் கிடைக்கும் என்று பீட்டர் கிரம்ஸ்னர் நம்பிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# புல்வெளிகள் அழிக்கப்படுவதால் அழிந்து வரும் ஹூபாரா பறவை இனம்





(அபுதாபி)

அமீரகத்தில் அழிந்து வரும் ஹூபாரா பஸ்டர்ட் என்ற பறவை இனத்தை பாதுகாக்க சர்வதேச ஹூபாரா நிதியத்துடன் சுற்றுச்சூழல் அமைச்சகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

ஹூபாரா பஸ்டர்ட் என்பது கானமயில் என்ற பறவையினமாகும். புல்வெளிகளில் வாழும் இப்பறவை, தற்காலத்தில் உலகமெங்கும் புல்வெளிகள் அழிக்கப்படுவதால் அழிந்துவரும் உயிரினங்களின் பட்டியலில் இந்தப் பறவைகள் இடம்பிடித்துவிட்டன.

ஹூபாரா பஸ்டர்ட் எனப்படும் இந்த கானமயில் பறவையானது பறக்கும் தன்மை கொண்ட பறவைகளிலேயே அதிக எடை கொண்டது. வறண்ட புல்வெளி பகுதிகளில் கானமயில்கள் வாழ்கின்றன. குறிப்பாக அமீரகத்தில் மான்கள் வாழும் நிலப்பரப்பு இந்த பறவைக்கு ஏற்ற நிலமாகும்.

பொதுவாக இந்தப் பறவை அரிதாக ஆண்டிற்கு ஒரு முட்டை மட்டுமே இடுகிறது. அதுவும் தரையில் இடுவதால் ஆபத்து அதிகம். ஒரு காலத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இவை அதிகம் காணப்பட்டன. தற்போது அமீரகத்திலும் இந்த பறவை காணப்படுகிறது.

எனவே இந்த வகை பறவையைப் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் அரசு சார்பில் எடுத்து வரப்படுகிறது. அதிகம் வேட்டையாடப்பட்டதாலும் ஆண்டிற்கு ஒரே முட்டையிடுவதாலும் இந்தப் பறவை குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# தென்கொரியா

(பியாங்யாங்)

**தென் கொரிய மக்கள் மீது உளவியல் ரீதியா... தயாராகி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது... மக்களின் மனதை பாதித்து, உளவியல் ரீதியா...**

கொரிய தீபகற்பத்தில் கடந்த 1950-53 ஆம் ஆண்டு வரை போர் நடந்தபோது, தென்கொரியா, வடகொரியா நாட்டினர் எல்லையில் பலூன்களில் துண்டுப் பிரசுரங்களை அனுப்பியும் புதுவிதமாக சண்டையிட்டனர்.

இது, கொரிய நாடுகளின் பாரம்பரிய சண்டையாக இருந்து வருகிறது. இதற்கிடையே, பரம எதிரிகளாக இருந்த வடகொரியாவும் தென்கொரியாவும் சில ஆண்டுகளுக்கு முன் நட்பாகின. பின்னர், இனி துண்டுப் பிரசுர சண்டையில் ஈடுபட வேண்டாம் என 2018 இல் ஒப்பந்தமும் செய்து கொண்டன.

இந்நிலையில், வடகொ... இருந்து தென் கொரியாவிற்... சென்ற சிலர், வடகொரிய தல... ஜாங் உன்னை விமர்சித்து தெ... எல்லையில் கடந்த மே மாத... துண்டுப் பிரசுர பலூன்களைப்... டனர்.

5 இலட்சம் துண்டு பிரசுரங்... வந்ததால் ஆத்திரமடைந்த வ... சில நாட்களுக்கு முன்பு, தன... யில் உள்ள கொரிய தகவல்... அலுவலகத்தை குண்டு வைத்து...

அத்தோடு, 2018 ஆம் ஆ... த்தை இரத்து செய்வதாக அ...

# சீனாவில் சோகம் பள்ளி மாணவர்கள் எண்மர்... ஆற்றில் மூழ்கி உயிரிழப்பு...

(பீஜிங்)

சீனாவில் பள்ளி மாணவர்கள் 8 பேர் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் சிச்சுவான் மாகாணம் டோங்னன் நகரில் தொடக்கப் பள்ளி ஒன்று உள்ளது. இங்கு படித்து வரும் மாணவர்கள் சிலர் பள்ளிக்கூடத்துக்கு அருகில் உள்ள ஆற்றில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது மாணவர்களில் ஒருவன் திடீரென ஆற்றில் மூழ்கினான். இதையடுத்து அவனை காப்பாற்றுவதற்காக உடனிருந்த சக மாணவர்கள் 7 பேரும் ஆற்றில் குதித்தனர். அவர்களும் ஆற்றில்



மூழ்கினர்.

இதுபற்றி தகவல் தெரிந்ததும்... அக்கம்பக்கத்தினர் விரைந்து சென்று... மீட்புப் பணியில் ஈடுபட்டனர். ஆனால்... மாணவர்கள் 8 பேரையும் பிணமாக... த்தான் மீட்க முடிந்தது. ஒரே சமயத்... தில் மாணவர்கள் 8 பேர் ஆற்றில்... மூழ்கி உயிரிழந்த சம்பவம் அங்கு... பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்... ளது. (2)

# பிரேஸிலை தொடர்ந்து மெக்சிக்கோவை குறிவைத்துத் தாக்கும் கொரோனா

(ஜெனிவா)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 இலட்சத்து 75 ஆயிரத்தை நெருங்கி வருகிறது. குறிப்பாக மெக்சிக்கோ நாட்டில் கொரோனாவின் தாக்கம் தீவிரமடைந்து வருகிறது.

சீனாவில் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 213 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பரவி பெரும் மனித



பேரழிவை ஏற்படுத்தி வருகிறது. இந்த வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 75 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, 91 இலட்சத்து 85 ஆயிரத்து 223 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 4 இலட்சத்து 74 ஆயிரத்து 237 பேர் உயிரிழந்துள்ளனர்.

வைரஸால் மிகவும் பாதிக்கப்பட்டு அதிக உயிரிழப்புகளை சந்தித்த நாடுகள் பட்டியலில் அமெரிக்காவும் பிரேஸிலும் முதல் இரண்டு இடங்களில் உள்ளன.

இந்நிலையில், மெக்சிக்கோ தற்போது கொரோனாவின் அடுத்த இலக்காக மாறி வருகிறது. அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று ஒரே நாளில்... ஆயிரத்து 44 பேர் உயிரிழந்துள்ளனர். இதுவரை மெக்சிக்கோவில் கொரோனாவுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 21... ஆயிரத்தை கடந்துள்ளது. (2)

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்-விஞ்ஞானம்
## மத்திய மாகாணம்- மாத்தளை வலயக் கல்வி அலுவலகம்

நேரம்: ஒரு மணித்தியாலம் வினாப்பத்திரம் - 01

01. வெப்பநிலையை அளவிடும் சர்வதேச அலகு
(1) θ (2) T (3) $^{0}C$ (4) K

02. பின்வருவனவற்றுள் அலகுகளைக் கொண்டிராத பௌதிகக் கணியம் யாது?
(1) பதார்த்தத்தின் அளவு (2) மூலர்த் திணிவு
(3) சாரணுத்திணிவு (4) செறிவு

03.முறையே காற்றின் மூலமாகவும் நீர் மூலமாகவும் பரம்பலடையும் வித்துக்களைக் கொண்ட கூட்டம் பின்வருவனவற்றுள் எது?
(1) தாமரை, ஆமணக்கு (2) எருக்கு, தென்னை
(3) எண்ணெய், இறப்பர் (4) எண்ணெய், ஆமணக்கு

04. இச்சைவழி இயங்கும் தசைகளின் சுருக்கத்தைக் கட்டுப்படுத்தும் மூளையின் பகுதி யாது?
(1) மூளையம் (2) மூளி
(3) நீள்வளைய மையவிழையம் (4) முண்ணாண்

05. ஐதரா கடனிமனி என்பன அடங்கும் விலங்குக் கூட்டம்
(1) நிடாரியா (2) அனலிடா
(3) ஆத்துரோப்போடா (4) எக்கைனோடேர்மேற்றா

06. இரும்பு பிரித்தெடுப்பின் போது ஊதுலையினுள் ஏமற்றைற்று எவ்வாயு மூலம் தாழ்த்தப்படுகிறது?
(1) காபனீரொட்சைட்டு (2) காபனோரொட்சைட்டு
(3) ஒட்சிசன் (4) நீராவி

07. 500g திணிவுடைய பொருளொன்று $60cms^{-1}$ கதியுடன் இயங்குகின்றது. பொருளின் உந்தம் யாது
(1) $30000kgms^{-1}$ (2) $300kgms^{-1}$
(3) $30kgms^{-1}$ (4) $0.3kgms^{-1}$

08. நீரின் ஆவியாதலின் தன்மறை வெப்பம் $2260kJkg^{-1}$ ஆகும். $100^{0}C$ வெப்பநிலையிலுள்ள நீரின் 10g ஐ $100^{0}C$ இல் முற்றாக ஆவியாக்கத் தேவையான வெப்பத்தின் அளவு யாது?
(1) 22600J (2) 2260J
(3) 226J (4) 22.6J

09. மின் விசிறியொன்றை 12V மின் வழங்கலுடன் தொடுக்கும் போது அதனூடாக 2A ஓட்டம் பாய்கின்றது எனின் மின் விசிறியின் வலு யாது?
(1) 6W (2) 12W (3) 24W (4) 48W


10. குறித்தவோர் திரவ -திரவக் கரைசலின் அமைப்பு 12% V/V எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் $50cm^3$ இல் அடங்கியுள்ள கரைப்பானின் கனவளவு யாது?
(1) $6cm^3$ (2) $12cm^3$ (3) $44cm^3$ (4) $88cm^3$

11. மனித உடல் நிறையில் 7% கனியுப்புக்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் கல்சியமும் பொசுபரசும் பிரதான இடத்தை வகிக்கின்றன. உடலில் கல்சியக் குறைபாட்டை இனங்காணக்கூடிய அறிகுறி பின்வருவனவற்றுள் எது?
(1) தசைகள் நலிவடைதல்
(2) பற்களும் என்புகளும் நலிவடைதல்
(3) நரம்புத் தளர்ச்சி ஏற்படல்
(4) குருதிச் சோகை ஏற்படல்

12. இதயத் துடிப்பின் போது தோன்றும் 'லப் - டப்' எனும் ஒலி தொடர்பான நான்கு கூற்றுகள் தரப்பட்டுள்ளன.
(a) முக்கூர் வால்வும் இருகூர் வால்வும் மூடப்படும் போது 'லப்' எனும் ஒலி கேட்கும்.
(b) அரைமதி வால்வுகள் மூடப்படும் போது 'லப்' எனும் ஒலி கேட்கும்
(c) முக்கூர் வால்வும் இருகூர் வால்வும் மூடப்படும் போது 'டப்' எனும் ஒலி கேட்கும்.
(d) அரைமதி வால்வுகள் மூடப்படும் போது 'டப்' எனும் ஒலி கேட்கும்
இவற்றுள் சரியான கூற்றுகளை உள்ளடக்கிய விடை யாது?
(1) a, b மாத்திரம் (2) a, c மாத்திரம் (3) a,d மாத்திரம் (4) b,d மாத்திரம்

13. பின்வருவனவற்றுள் நெட்டாங்கு அலைக்கு உதாரணம் எது?
(1) நீர் மேற்பரப்பில் தோன்றும் நீர் அலைகள்
(2) வயலினிலிருந்து காதுவரை வளியினூடாக வந்தடையும் அலைகள்
(3) கிற்றாரின் அதிரும் இழைகளிலிருந்து தோன்றும் அலைகள்
(4) நெருப்புக் குவியலிலிருந்து அதற்கு அருகேயிருக்கும் ஒருவரை வந்தடையும் வெப்ப அலைகள்

14. $L_1, L_2$ என்பன முறையே 25cm குவியத் தூரமுடைய குவிவு வில்லையும் 20 cm குவியத் தூரமுடைய குழிவு வில்லையுமாகும்.இவையிரண்டும் ஒரே தலைமை அச்சில் வைக்கப்பட்டுள்ளன. $L_1$ எனும் வில்லையிலிருந்து 25cm தூரத்தில் அதன் தலைமை அச்சின் மீது O எனும் புள்ளிப் பொருளொன்று வைக்கப்பட்டுள்ளது. பொருளிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் இரண்டு வில்லைகள் மீதும் பட்டு முறிவடைந்த பின்னர் தோன்றும் விம்பத்தின் புதிய அமைவிடம் யாது?




(1) குவிவு வில்லைக்கு இடப்புறமாக முடிவிலியில்
(2) குவிவு வில்லைக்கு வலப்பக்கமாக குவிவு வில்லையிலிருந்து 25cm தூரத்தில்
(3) குவிவு வில்லைக்கும் குழிவு வில்லைக்கும் இடையே குழிவு வில்லையிலிருந்து 25cm தூரத்தில்
(4) குழிவு வில்லைக்கு வலது பக்கத்தில் முடிவிலியில்

15. நீர்க் கரைசலினுள் பகுதியாக அயனாக்கமடைவதன் மூலம் $H^+$ அயனை விடுவிக்கும் சேர்வை யாது?
(1) $HNO_3$ (2) $H_2CO_3$ (3) $H_2SO_4$ (4) NaOH

16. தாவரங்களில் நடைபெறும் கழிவகற்றற் செயற்பாடாகக் கருதக்கூடியது
(1) ஆவியுயிர்ப்பின் போது நீராவி வெளியேறல்
(2) கசிவின் போது கனியுப்புக்கள் வெளியேறல்
(3) ஒளித்தொகுப்பின் போது ஒட்சிசன் வாயு வெளியேறல்
(4) கசிவின் போது நீர்த் துளிகள் வெளியேறல்


17. Na, Mg, Al, S ஆகிய மூலகங்களுள் ஈரியல்புடைய ஒட்சைட்டை உருவாக்கக்கூடிய மூலகம் எது?
(1) Na (2) Mg (3) S (4) Al

18. தலைமுறையுரிமை தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக
(a) ஒன்றுக்கொன்று எதிரான இயல்புச் சோடிகளுள் ஒரு இயல்பு மாத்திரம் பாரம்பரியமடையும் விதத்தைச் சோதித்தல் ஓரினக் கலப்பு எனப்படும்.
(b) பரம்பரை இயல்புகள் எனப்படுவது ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்கு ஊடுகடத்தப்படும் இயல்புகளாகும்.
(c) பரம்பரை இயல்புகள் பல சந்ததிகளைத் தவிர்த்து அதற்கடுத்த சந்ததியில் ஊடுகடத்தப்படுவதில்லை.இவற்றுற் சரியானது
(1) a, b மாத்திரம் (2) a,c, மாத்திரம்
(3) b,c மாத்திரம் (4) a,b,c யாவும் சரி

19. X எனும் உலோகம் ஐதான அமிலத்துடன் தாக்கம் புரிந்து ஐதரசன் வாயுவை விடுவிக்கும். அம்மூலகம் தாக்கத் தொடரின் எவ்விடத்தில் அமைந்துள்ளது?
(1) Ag இற்கும் Au இற்கும் இடையில்
(2) Pb இற்கும் Cu இற்கும் இடையில்
(3) Cu இற்கும் Hg இற்கும் இடையில்
(4) Al இற்கும் Fe இற்கும் இடையில்


20. சோடியம் (Na) அணுவில் 11 புரோத்தன்களும், 12 நியூத்திரன்களும் 11 இலத்திரன்களும் உள்ளன. இவ்வணுவை நியமக் குறியீட்டில் சரியாகக் குறிக்கப்பட்டுள்ள விதம் பின்வருவனவற்றுள் எது?
(1) $^{12}_{11}Na$ (2) $^{11}_{12}Na$ (3) $^{23}_{11}Na$ (4) $^{23}_{12}Na$

21. வெப்ப வழங்கல் மூலம் திண்மப்பொருள் ஒன்று படிப்படியாக வெப்பமேற்றப்படுகிறது. நேரத்துடன் வெப்பநிலை மாறுபடும் விதம் வரைபிற் காட்டப்பட்டுள்ளது. இப்பதார்த்தத்தின் உறை நிலை அண்ணளவாக யாது?
(1) $-50^{0}C$
(2) $25^{0}C$
(3) $150^{0}C$
(4) $250^{0}C$





22.பின்வரும் கூற்றுகளுள் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) நீரும் அமிலமும் துருப்பிடித்தலுக்கு அவசியமான காரணிகளாகும்.
(2) அமிலமும் உப்பும் துருப்பிடித்தல் வீதத்தை அதிகரிக்கும் காரணிகளாகும்
(3) மூலங்கள் துருப்பிடித்தல் வீதத்தைக் குறைக்கும்
(4) கதோட்டுப் பாதுகாப்பு மூலம் துருப்பிடித்தல் தடுக்கப்படுகின்றது.

23. குறித்த கலப்பிரிவின் போது நிறமூர்த்தங்கள் பிரிவடைந்து செல்லும் விதம்உருவிற் காட்டப்பட்டுள்ளது. இத்தகைய கலப்பிரிவில் காணப்படும் முக்கியத்துவமற்ற இயல்பு யாது?
(1) பல்கல அங்கிகளின் உடல் வளர்ச்சியிற் பங்களிப்புச் செய்தல்
(2) இலிங்கமில்முறை இனப்பெருக்கமாகக் கருதப்பட முடியும்
(3) இறந்த கலங்களுக்குப் பதிலாக புதிய கலங்களைத் தோற்றுவித்தல்
(4) சந்ததிக்குச் சந்ததி நிறமூர்த்தங்களின் எண்ணிக்கையை மாறாது பேணக்கூடியதாயிருத்தல்.



24. துவிச்சக்கர வண்டியொன்றின் இயக்கத்தைக் காட்டும் இடப்பெயர்ச்சி - நேர வரைபு அருகே தரப்பட்டுள்ளது. அதன் வேகம் யாது?

(1) $0.4ms^{-1}$ (2) $2.5ms^{-1}$
(3) $5ms^{-1}$ (4) $20ms^{-1}$




25. பின்வருவனவற்றுள் வெப்ப விரிவு பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் எது?

(A) வண்டிச் சில்லுகளுக்கு இரும்பு வளையம் பொருத்துதல்
(B) இரண்டு தண்டவாளங்களுக்கிடையில் இடைவெளி விடப்படல்
(C) மின்னழுத்திகளில் ஈருலோக நாடா பொருத்தப்படல்
(D) மின் மற்றும் தொலைபேசிக் கம்பிகள் தொய்வாகப் பொருத்தப்படல்

(1) C மாத்திரம் (2) A,B மாத்திரம்
(3) A,C மாத்திரம் (4) A,B,C,D யாவும்

26. கலவையொன்றின் கூறுகளை வேறாக்கும் பின்வரும் முறைகளில் பொறிமுறை வேறாக்கலுக்குரிய முறை அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

(1) களைதல் (2) அரித்தல்
(3) நீரில் மிதக்கவிடல் (4) வெப்பப் பிரிகை

27. நீர் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக

(a) மிகச் சிறந்த கரைப்பானாகும்
(b) உடல் வெப்பநிலைச் சீராக்கலில் பங்களிப்புச் செய்யும்.
(c) உடலினுள் பதார்த்தங்களைக் கொண்டு செல்லும் ஊடகமாகத் தொழிற்படும்
(d) நொதியங்களின் சிறந்த தொழிற்பாட்டுக்கு அவசியமாகும்.

இவற்றுள் நீர் கொண்டுள்ள சிறப்பான பண்புகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க

(1) a,b,c (2) b,c, d
(3) a ,b,d (4) a , c, d

28. இரசாயனத் தாக்கம் ஒன்றின் தாக்கவீதத்தில் ஓரலகு நேரத்தில் தாக்கிகளின் துணிக்கைகளிடையே ஏற்படும்மோதுகைகயின் எண்ணிக்கை செல்வாக்குச் செலுத்தும். அது தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

(a) தாக்கிகளின் செறிவு அதிகரிக்கும் போது அத்துணிக்கைகளிடையே ஏற்படும் மோதுகைகளின் வீதமும் அதிகரிக்கும்.
(b) ஊடகத்தின் வெப்பநிலை குறைவடையும் போது தாக்கிகளின் துணிக்கைகளுக்கிடையேயான மோதுகை வீதம்குறைவடையும்.
(c) தாக்கிகளின் மேற்பரப்புப் பரப்பளவு அதிகரிக்கும் போது அவற்றின் துணிக்கைகளிடையேயான மோதுகை வீதம் குறைவடையும்.

மேற்படி கூற்றுகளுள் சரியானது

(1) a யும் b யும் மாத்திரம் (2) a யும் c யும் மாத்திரம்
(3) b யும் c யும் மாத்திரம் (4) a,b,c ஆகிய யாவும் சரி

29. திரான்சிஸ்ரர் ஒன்றின் மின்சுற்றுக் குறியீடு உருவில் காட்டப்பட்டுள்ளது. திரான்சிஸ்ரரின் வகையையும் அதன்முனைவுகளையும் காட்டும் சரியான விடை யாது?

| | திரான்சிஸ்ரர் வகை | அடி | காலி | சேகரிப்பான் |
|---|---|---|---|---|
| (1) | n p n | 2 | 1 | 3 |
| (2) | n p n | 1 | 2 | 3 |
| (3) | p n p | 2 | 1 | 3 |
| (4) | p n p | 3 | 1 | 2 |




30. சோடியம் காபனேற்றின் ($Na_2CO_3$) 53g இல் அடங்கியுள்ள காபன் அணுக்களின் எண்ணிக்கை யாது? (Na=23,C=12,O = 16)

(1) $\frac{6.022 \times 10^{23} \times 53}{106}$ (2) $\frac{6.022 \times 10^{23} \times 106}{53}$ (3) $\frac{6.022 \times 10^{23} \times 12}{53}$ (4) $\frac{6.022 \times 10^{23} \times 12}{106}$


31. ஒளிக்கதிர்களின் தெறிப்பு மற்றும் முறிவு தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

(A) இரண்டு ஊடுகாட்டும் ஊடகங்களைப் பிரிக்கும் மேற்பரப்பிற்குச் சாய்வாகப் படும் சகல ஒளிக்கதிர்களும்முறிவடையும்.
(B) அடர்ந்த ஊடகத்திலிருந்து ஐதான ஊடகத்தை நோக்கிப் பயணிக்கும் ஒளிக்கதிர்கள் தெறிப்படைதல் முழுஅகத்தெறிப்பு எனப்படும்.
(C) ஒளிமுறிவு விதிகள் சினெலின் விதிகள் எனப்படும்.

இவற்றுள் சரியானது

(1) B மாத்திரம் சரியானது (2) A,B மாத்திரம் சரியானது
(3) A, B,C யாவும் சரியானது (4) A,B,C யாவும் பிழையானது

32. உருவிற் காட்டப்பட்டுள்ள மின்சுற்றில் A,B,C,D என்பன சர்வ சமனான மின்குமிழ்களாகும். சுற்றில் ஆளி S ஐ மூடியதும் நடைபெறும் மாற்றத்தைச்சரியாகக் குறிப்பிடும் விடை யாது?




(1) A அணைவதுடன் B,C என்பவற்றின் பிரகாசம் அதிகரிக்கும்.
(2) C அணைவதுடன் B, A என்பவற்றின் பிரகாசம் குறைவடையும்.
(3) A ,C என்பன அணைவதுடன் D யின் பிரகாசம் அதிகரிக்கும்
(4) A,C என்பன அணைவதுடன் B யின் பிரகாசம் அதிகரிக்கும்

33. இலங்கையில் நோய்களினால் ஏற்படும் மரணங்களில் 60% ஆனவை தொற்றா நோய்கள் காரணமாக ஏற்படுவனவாகும். தொற்றாநோய்கள் ஏற்படுவதற்கான பிரதான காரணம்


(1) அசுத்தமான நீரைப் பருகுதல்
(2) தவறான உணவுப் பழக்கவழக்கங்கள்
(3) வளிமண்டலத்தில் பச்சை வீட்டு வாயுக்களின் அளவு அதிகரித்தல்
(4) சேதனப் பசளைகள் பயன்படுத்தப்படாத உணவுகளை உட்கொள்ளல்

34. உருவிற் காட்டப்பட்டுள்ள தடைத் தொகுதியில் A,B என்பவற்றிடையேயான சமவலுத் தடை யாது?

(1) 5 Ω (2) 7 Ω
(3) 9 Ω (4) 11 Ω



35. AB,DC எனும் இரு மெல்லிய கடத்திக் கம்பிகளால் BC எனும் கோல் கிடையாகத் தொங்கவிடப்பட்டுள்ளது. அதன்இழைகளில் A மற்றும் D ஆகிய இரு அந்தங்களினூடாக மின்சுற்று தொடுக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே உரு a,b,c ஆகியவற்றால் காட்டப்பட்டுள்ளன. கடதாசியின் தளத்திற்குச் செங்குத்தாக கடதாசியினுள் காந்தப்புலம் தொழிற்படுகின்றது.



இழைகளின் இழுவைகளிடையேயான தொடர்பைக் காட்டும் சரியான விடை பின்வருவனவற்றுள் எது?

(1) $T_1 > T_2 > T_3$ (2) $T_1 > T_3 > T_2$ (3) $T_1 = T_2 > T_3$ (4) $T_2 > T_3 > T_1$

36. மின்னிரசாயனம் தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A- இலத்திரனை விடுவித்தல் ஒட்சியேற்றமாகும்
B- ஒட்சியேற்றம் நடைபெறும் மின்வாய் கதோடாகும்.
C- புறச்சுற்று வழியாக அனோட்டிலிருந்து கதோட்டை நோக்கி இலத்திரன்கள் பாய்ந்து செல்லும்

மேற்படி கூற்றுகளுள் சரியானது

(1) A,B மாத்திரம் (2) B,C மாத்திரம்
(3) A,C மாத்திரம் (4) A,B,C யாவும்

37. புகைத்தல் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக

கூற்று1:- புகைப்போரின் குருதியினூடாகக் கொண்டு செல்லப்படும் ஒட்சிசனின் அளவு குறையும்.

கூற்று2:- சுவாசப்பைகளில் சிகரட் புகையிலுள்ள காபனோரொட்சைட்டு குருதியினால் உறிஞ்சப்பட்டு ஹீமோகுளோபினுடன் இணையும்.

மேற்படி கூற்றுகள் தொடர்பாக பின்வருவனவற்றுள் சரியானதைத் தெரிவு செய்க

(1) கூற்று 1, கூற்று 2 இரண்டும் உண்மையானவை.
(2) கூற்று 1, கூற்று 2 இரண்டும் பொய்யானவை.
(3) கூற்று 1 உண்மையானது கூற்று 2 பொய்யானது
(4) கூற்று 1 பொய்யானது கூற்று 2 உண்மையானது


38. கலச்சுவாசத்தின் இரண்டு விதங்களைக் காட்டும் இரசாயனச் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன

a குளுக்கோசு + ஒட்சிசன் ⟶ காபனீரொட்சைட்டு + நீர் + சக்தி
b குளுக்கோசு ⟶ இலற்றிக் அமிலம் + சக்தி

இவ்விரு சந்தர்ப்பங்களுக்கும் பொருத்தமான சரியான விடையைத் தெரிவு செய்க

(1) (a) எனும் சந்தர்ப்பம் காற்றுள்ள சுவாசம் ஆவதுடன், குளுக்கோசு மூலக்கூறு பகுதியாக உடையும்.
(2) (a) எனும் சந்தர்ப்பம் காற்றின்றிய சுவாசம் ஆவதுடன், குளுக்கோசு மூலக்கூறு முற்றாக உடையும்.
(3) (b) எனும் சந்தர்ப்பம் காற்றின்றிய சுவாசம் ஆவதுடன், குளுக்கோசு மூலக்கூறு பகுதியாக உடையும்.
(4) (b) எனும் சந்தர்ப்பம் காற்றின்றிய சுவாசம் ஆவதுடன், குளுக்கோசு மூலக்கூறு முழுமையாக உடையும்.

39. மூன்று வகையான தசையிழையங்களின் வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.



(a) (b) c)

மேற்படி இழையங்களுடன் தொடர்புடைய சரியான விடையைத் தெரிவு செய்க

| | (a) | (b) | (c) |
|---|---|---|---|
| 1 | உணவுக் கால்வாயின் சுவர்களில் காணப்படும் | இருதலைத் தசைகளிற் காணப்படும் | இதயத்திற் காணப்படும் |
| 2 | கதிருருவான தோற்றமுடையது | உருளை வடிவானது கிளைத்தும் காணப்படும் | கிளைத்துக் காணப்படும் |
| 3 | இச்சையுள்ளது | இச்சையுள்ளது | இச்சையின்றியது |
| 4 | தனிக்கருவாலானது. கரு கலத்தின் மத்தியிற் காணப்படும் | தனிக்கருவாலானது. கரு கலத்தின் ஓரத்திற் காணப்படும் | தனிக்கருவாலானது. கலத்தின் அமைவு ஒழுங்கற்றது. |

40. சூழல் மாசடைவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் சில கீழே தரப்பட்டுள்ளன

(a) பூகோள வெப்பம் அதிகரித்தல்
(b) தாவரங்களில் விளைதிறன் குறைவடைதல்
(c) அமில மழை பெய்தல்
(d) ஆக்கிரமிப்பு அங்கியினங்கள் தோன்றுதல்

இவற்றுள் சூழல் மாசடைவதில் நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் காரணிகளையும் மறைமுகமாகப் பங்களிப்புச் செய்யும் காரணிகளையும் குறிப்பிடும் விடையைத் தெரிக

| | நேரடியாகப் பங்களிப்புச் செய்பவை | மறைமுகமாகப் பங்களிப்புச் செய்பவை |
|---|---|---|
| (1) | a , b | c , d |
| (2) | a , c | b , d |
| (3) | b, c | a , d |
| (4) | a , d | b , c |

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்- விஞ்ஞானம்


## மத்திய மாகாணம்- மாத்தளை வலயக் கல்வி அலுவலகம்

நேரம்: 3 மணித்தியாலம் வினாப்பத்திரம் - 02

(01) (A) குறித்த தரைச் சூழலில் சக்திக் கூம்பகத்துடன் தொடர்புடைய தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன

| போசணை மட்டம் | சக்தி (யூல்) J |
|---|---|
| உற்பத்தியாக்கிகள் | 20 000 |
| முதன்மை நுகரிகள் | 2 00 |
| துணை நுகரிகள் | X |
| புடை நுகரிகள் | 20 |

(i) உற்பத்தியாளர் மற்றும் முதன்மை நுகரிகளின் சக்தியை பின்வரும் ஆள்கூற்றுத் தளத்தில் சலாகை வரைபாகக் குறிப்பிடுக




(ii) சக்தி விரயமாகும் கோலத்துக்கு அமைய X இற்குப் பொருத்தமான பெறுமானத்தைக் காண்க

.......................................................................

(iii) ஒரு போசணை மட்டத்திலிருந்து அடுத்த போசணை மட்டத்துக்குச் செல்லும் போது சக்தி விரயமாவதேன்?

.......................................................................

(iv) சூழற் சமநிலை என்பதாற் கருதப்படுவது யாது?

.......................................................................

(B) பூகோளம் வெப்பமடைவதில் பச்சை வீட்டு வாயுக்கள் பிரதான பங்கை வகிக்கின்றன. அத்துடன் நீண்டநாள் காணப்படும் சேதன மாசுக்களும் புவியின் நிலவுகைக்கு அச்சுறுத்தலாய் அமைந்துள்ளன.

(i) பின்வரும் பச்சை வீட்டு வாயுக்கள் விடுவிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பம் வீதம் அட்டவணையில் குறித்துக் காட்டுக.

| பச்சை வீட்டு வாயுக்கள் | விடுவிக்கப்படும் விதம் |
|---|---|
| காபனீரொட்சைட்டு | |
| மெதேன் | |
| குளோரோ புளோரோ காபன் | |

(ii) சேதன மாசுக்களின் விசேட இயல்புகள்இரண்டைக் குறிப்பிடுக

(அ).......................................................

(ஆ).......................................................

(C) நிலைபேறான விவசாயப் பயன்பாடாக பல்பயிர்ச்செய்கை, உயிர்ப் பீடைக் கட்டுப்பாடு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

(i) பல்பயிர்ச் செய்கையின் அனுகூலம் ஒன்றைக் குறிப்பிடுக

.......................................................

(ii) உயிர்ப் பீடைக் கட்டுப்பாடு பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்துக்கான உதாரணம் ஒன்றைக் குறிப்பிடுக

.......................................................

(iii) இங்கு குறிப்பிடப்பட்ட பயன்பாடு தவிர்ந்த மற்றொரு பேண்தகு விவசாய பயன்பாட்டைக் குறிப்பிடுக

.......................................................

(02)(A) அங்கிகளின் உடல் பல்வேறு இரசாயனச் சேர்வைகளால் ஆனது. இச்சேர்வைகள் யாவும் பல்வேறு மூலகங்கள் வெவ்வேறு விகிதத்தில் இணைவதால் உருவாகியுள்ளன.

(i) உயிருள்ளவற்றுள் பரவலாகக் காணப்படும் மூலகங்கள் நான்கைக் குறிப்பிடுக

.......................................................

(ii) கலங்களில் அல்லது உடலில் நடைபெறும் இரசாயனத் தாக்கங்களை ஊக்குவிக்கும் புரதம் எப்பெயரால் அழைக்கப்படும்?

.......................................................

(iii) மாப்பொருட் சமிபாட்டுடன் தொடர்புடைய இரசாயனத் தாக்கம் கீழே தரப்பட்டுள்ளது. இங்கு (p) எனக் குறிப்பிடப்பட்டுள்ள பதார்த்தம் யாது?

$$\text{மாப்பொருள்} \xrightarrow{p} \text{மோல்ற்றோசு}$$

(iv) கலம் எனப்படுவது உயிரங்கிகளின் உடலின் கட்டமைப்பு அலகாகும். தாவர மற்றும் விலங்குக் கலங்களில் உயிரியல் ரீதியான பொது இயல்புகளையும் வேறுபாடுகளையும் காணக்கூடியதாக உள்ளது.


(a) தாவரக் கலங்களில் காணப்படுவதும் விலங்குக் கலங்களில் காணப்படாததுமான புன்னாங்கம் ஒன்றைப் பெயரிடுக.

.......................................................

(b) மேற்படி புன்னாங்கம் கலங்களில் ஆற்றும் தொழிற்பாட்டைக் குறிப்பிடுக

.......................................................

(V) உயிர்க் கலங்களினுள் சக்தி பிறப்பிக்கப்படும் செயற்பாடு கலச்சுவாசம் என அழைக்கப்படும். உருவில் சுவாசத்தின் போது ஒட்சிசன் அகத்துறிஞ்சப்படுகின்றது என்பதைக் காட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டின் உபகரண ஒழுங்கமைப்பு காட்டப்பட்டுள்ளது.




(a) இங்கு சிறிய பரிசோதனைக் குழாயில் வைக்கப்பட்டுள்ள திரவம் (X) யாது?

.......................................................................

(b) அத் திரவத்தின் தொழிற்பாட்டைக் குறிப்பிடுக

.......................................................................

(c) இங்கு ஒட்சிசன் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பெறக்கூடிய அவதானிப்பைக் குறிப்பிடுக.

.......................................................................

(B) பல்கல விலங்குகளில் குறித்த தொழிலை ஆற்றுவதற்கென ஒழுங்கமைந்துள்ள கலங்களின் கூட்டம் இழையம் எனப்படும். சில விலங்கிழையங்களும் அவற்றின் தொழில்களும் அட்டவணையிற் தரப்பட்டுள்ளன.

| இழையம் | தொழில்கள் |
|---|---|
| மேலணி இழையம் | புறமேற்பரப்புகளைப் போர்த்தல் |
| தொடுப்பிழையம் | அங்கங்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தல் |
| Y | அசைவின் போது விசையை வழங்கல் |
| நரம்பிழையம் | கணத்தாக்கங்களைக் கடத்தல் |

(i) இங்கு Y எனக் குறிப்பிடப்பட்டுள்ள இழைய வகை யாது?

.......................................................................

(ii) மனித உடலிற் காணப்படும் அத்தகைய இழையத்துக்கு ஓர் உதாரணம் தருக

.......................................................................

(iii) தூசுக்கள் மற்றும் பற்றீரியாக்கள் என்பன உட்செல்வதைத் தடுப்பதற்காக மூக்குக் குழியில் காணப்படும் இழையம் யாது?

.......................................................................

(iv) மூக்குக் குழியினூடாக வளி உட்செல்லும் போது நடைபெறும் பிரதான மாற்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக

.......................................................................

(iv) மனித சுவாசத் தொகுதியின் ஆரம்பக் கட்டமைப்பு மூக்குக் குழியாகும். மூக்குக் குழியினூடாக வளி செல்லும் போது நடைபெறும் பிரதான மாற்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக

.......................................................................

(iv) மனிதரில் நைதரசன் கழிவுப் பொருட்களை உடலிலிருந்து அகற்றும் பிரதான அங்கம் சிறுநீரகம் ஆகும்.


(a) சிறுநீரகத்தினால் சிறுநீர் உற்பத்தி செய்யப்படும் செயற்பாடு மூன்று படிமுறைகளில் நடைபெறும். அவற்றுள் ஒன்றைப் பெயரிடுக

.......................................................................

(b) சிறுநீரில் அடங்கும் நைதரசன் கழிவுப்பொருள் ஒன்றைப் பெயரிடுக.

.......................................................................

(3)(A) குறித்த ஆவர்த்தனத்திலுள்ள சில மூலகங்களின் மின்னெதிர்த் தன்மை வேறுபடும் விதம் வரைபிற் காட்டப்பட்டுள்ளது. இங்கு C என்பது இரண்டாம் ஆவர்த்தனத்திலுள்ள மூலகமாகும் (இங்கு தரப்பட்டுள்ள குறியீடுகள் அவற்றின் நியமக் குறியீடுகள் அல்ல)




(i) (a) வரைபிற் காட்டப்பட்டுள்ள மூலகங்களிடையே ஐந்தாம் கூட்டத்திற்குரிய மூலகம் யாது?

.......................................................................

(b) மேலே (a) யிற் குறிப்பிட்ட மூலகத்தின் இலத்திரன் நிலையமைப்பை எழுதுக.

.......................................................................

(ii) உருவிற் காட்டப்பட்டுள்ள மூலங்களிடையே மிகக் குறைந்த முதலாம் அயனாக்கற் சக்தியைக் கொண்ட மூலகம் எது?

.......................................................................

(iii) வரைபிற் தரப்பட்டுள்ள B எனும் மூலகம் D எனும் மூலகத்துடன் இணைந்து உருவாக்கும் சேர்வையின் சூத்திரத்தை எழுதுக.

.......................................................................

(iv) மேலே வரைபிற் தரப்பட்டுள்ள B எனும் மூலகம்

(a) ஐதரசனுடன் ஆக்கும் சேர்வையின் பிணைப்பு வகை யாது?.......................................................

(b) மேலே (iv) (a) இல் உருவாக்கப்படும் சேர்வையின் லூயிஸ் கட்டமைப்பை வரைக


(V) மேலே (iv) (a) இற் குறிப்பிடப்பட்ட சேர்வையின் கொதிநிலை மற்றும் தன் வெப்பக் கொள்ளளவு என்பன உயர் பெறுமானத்தைக் கொண்டிருக்கும். இதற்கான காரணத்தைக் குறிப்பிடுக

.......................................................................

(vi) ஐதரசன் அணுவானது மூன்று சமதானிகளைக் கொண்டுள்ளது. அவற்றை நியம வடிவில் எழுதுக.

.......................................................................

(B) கரைதிறன் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றி அறிவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட உபகரண அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது. இங்கு X,Y,Z ஆகிய குழாய்களுக்கு 50g சீனி சேர்த்து கரைக்கப்பட்டு மேலும் சீனி கரையாத சந்தர்ப்பத்தை எட்டும் போது மீதி வடித்தெடுக்கப்பட்டு உலர்த்தி நிறுத்தெடுக்கப்பட்டது.




(i) மேலே X,Y,Z என்பவற்றுள் கரைதிறன் மீது கரைப்பானின் தன்மை செல்வாக்குச் செலுத்துவதைக் காட்டும் உபகரண ஒழுங்கமைப்புகளைப் பெயரிடுக.......................................................


(ii) (a) மேலே X,Y ஆகிய குழாய்களிடையே எதில் அதிகளவு சீனி எஞ்சியிருக்கும்? ...............................

(b) மேலே (a) இல் உமது அவதானிப்புக்கான காரணத்தைக் குறிப்பிடுக.......................................

(04) (A) இயக்கம் தொடர்பான நியூற்றனின் இரண்டாம் விதியை எழுதுக

...............................................................

(B) (i) உழவு இயந்திரம் ஒன்றைப் பயன்படுத்தி கிடையான தளம் ஒன்றின் வழியே மரக்குற்றி யொன்றை இழுத்துச் செல்லும் விதம் உருவிற் காட்டப்பட்டுள்ளது. இங்கு மரக்குற்றியுடன் பொருத்தப்பட்டுள்ள இழை கிடையாகக் காணப்படுகிறது. மரக்குற்றி மீது தொழிற்படும் உராய்வு விசையை F என உருவிற் குறித்துக் காட்டுக.



(ii) குற்றியின் திணிவு 400kg எனின் தரையினால் குற்றி மீது ஏற்படுத்தும் செவ் வன் மறுதாக்கம் யாது?

...............................................................

(iii) இழையினால் குற்றி மீது 1200 N விசை பிரயோகிக்கப்படும் போது குற்றி ஓய்வில் இருந்தது. அச்சந்தர்ப்பத்தில் குற்றி மீது தொழிற்படும் உராய்வு விசை யாது?


...............................................................

(iv) இழையினால் குற்றி மீது பிரயோகிக்கப்படும் விசை 1560N ஆகும் போது குற்றி மீது தொழிற்படும் உராய்வு விசை 1500N எனின் மரக்குற்றி இயங்கும் ஆர்முடுகலைக் காண்க.

...............................................................

(B) (i) மரக்குற்றி ஓய்விலிருந்து இயங்க ஆரம்பிக்கின்றது எனின் அவ்வியக்கத்துக்கான வேக-நேர வரைபை தரப்பட்ட ஆள்கூற்றுத் தளத்தில் வரைக.

(ii) மேற்குறிப்பிட்ட குற்றி 20 செக்கன்கள் இயங்கிய பின்னர் பெற்றுக்கொள்ளும் உச்ச வேகத்தைக் காண்க.




...............................................

(d) 20 செக்கன்களில் குற்றியின் இடப்பெயர்ச்சியை மேற்படி வேக - நேர வரைபின் அடிப்படையில் காண்க.

...............................................

(C) பொலிஸ்ரைரீன் குவளையொன்றினுள் உள்ள 200g நீரை வெப்பச் சுருள் ஒன்றைப் பயன்படுத்தி வெப்பமேற்றப் படும் சந்தர்ப்பம் ஒன்று உருவிற் காட்டப்பட்டுள்ளது. நீரின் தன் வெப்பக் கொள்ளளவு 4200J $kg^{-1}{}^{o}C^{-1}$ ஆகும்.



(i) நீரின் வெப்பநிலையை 30°C யிலிருந்து 100°C வரை அதிகரிப்பதற்குத் தேவையான வெப்பத்தின் அளவைக் காண்க.

...............................................

(ii) நீரின் வெப்பநிலை 100°C யை அடைந்த பின்னர் வெப்பச் சுருள் மூலம் வெப்பம் வழங்கப்பட்டாலும் நீரின் வெப்பநிலையில் அதிகரிப்பு ஏற்படவில்லை. இதற்கான காரணத்தைக் குறிப்பிடுக

...............................................................

(iii) வெப்பச் சுருளைப் பயன்படுத்தி மேற்படி நீரின் வெப்பநிலையை 30°C யிலிருந்து 100°C வரை அதிகரிப்பதற்கு 2 நிமிடங்கள் எடுத்தது. சூழலுக்கு வெப்பம் இழக்கப்படவில்லை எனவும் குவளையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெப்பம் புறக்கணிக்கத்தக்கது எனவும் கொண்டு வெப்பச் சுருளின் வலுவைக் காண்க


.......................................................................

(05)(A) அங்கிகள் பல்வேறு முறைகளை அடிப்படையாகக் கொண்டு பாகுபடுத்தப் பட்டுள்ளன. அவ்வாறான தாவரப் பாகுபாடு கீழே தரப்பட்டுள்ளது.

(i) தாவரங்கள் உள்ளடங்கும் இராச்சியம் எப்பெயரால் அழைக்கப்படும்?

(ii) P அடங்கும் கூட்டத்தைப் பெயரிடுக

(iii) Q அடங்கும் தாவரக் கூட்டத்துக்கான உதாரணம் ஒன்றைக் குறிப்பிடுக.





(iv) மூன்று அறைகளைக் கொண்ட இதயத்தை உடைய விலங்குக் கூட்டம் யாது?

(B) அங்கிகள் புதிய சந்ததியைத் தோற்றுவிக்கும் செயற்பாடு இனப்பெருக்கம் எனப்படும். விலங்குகளின் இலிங்கமுறை இனப்பெருக்கத்தில் இரசாயன இயைபாக்கம் முக்கிய இடத்தை வகிக்கிறது. தாவரங்களில் இலிங்கமுறை இனப்பெருக்கத்துக்கென ஒழுங்கமைந்த கட்டமைப்பு பூவாகும்.

(i) பூவொன்றின் ஆணகத்தின் பிரதான பகுதிகள் யாவை?

(ii) மனித இனப்பெருக்கத்தின் போது பெண்ணின் மாதவிடாய்ச் சக்கரத்தில் இரண்டு இடங்களில் மாற்றங்கள் ஏற்படும் அத்தகைய மாற்றத்தின் போது ஓமோன்களின் நடத்தை பின்வரும் படத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.




உரு A உரு B

இங்கு A,B ஆகிய உருக்களில் காட்டப்பட்டுள்ள ஓமோன்கள் தொழிற்படும் இரண்டு இடங்களை முறையே குறிப்பிடுக.

(iii) இங்கு உரு B யில் தொழிற்படும் மற்றைய ஓமோன் யாது?

(iv) பாரம்பரியம் தொடர்பான பின்வரும் பதங்களை விளக்குக

(a) பரம்பரையலகு வெளிப்படுத்துகை (b) பரம்பரையலகு இணைப்பு


(C) உணவுச் சமிபாட்டின் போது உருவாகும் விளைவுகள் குருதியின் மூலம் உடலின் தேவையான இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

(i) உணவுச் சமிபாட்டின் போது பின்வரும் அங்கங்களில் நடைபெறும் பிரதான தொழி ற்பாடுகளைக் குறிப்பிடுக

(a) பெருங்குடல் (b) ஈரல்

(ii) உமிழ்நீர்ச் சுரப்பியால் சுரக்கப்படும், உணவுச் சமிபாட்டில் பங்களிப்புச் செய்யும் நொதி யத்தைக் குறிப்பிடுக.

(iv) தெறிவில்லின் பயணப் பாதை கீழே பாய்ச்சற்கோட்டுப் படம் மூலம் காட்டப்பட் டுள்ளன




X இனால் நியூரோனும் Y யினால் நரம்புத் தொகுதியின் பகுதியும் தரப்பட்டுள்ளன. X,Y என்பவற்றை இனங்காண்க.

06(A). சுவாதி செப்புச் சல்பேற்றுக் கரைசலின் சம கனவளவுகளை நான்கு பரிசோதனைக் குழாய்களில் இட்டாள். ஒவ்வொரு குழாயினுள்ளும் முறையே இரும்பு, மக்னீசியம், செப்பு, நாகம், ஆகியவற்றின் சம பருமனுள்ள துண்டுகளை இட்டாள்.

(i) இச்செயற்பாட்டின் போது குழாயினுள் இரசாயன மாற்றம் நடைபெற்றுள்ளமையை எவ் அவதானிப்பைக் கொண்டு முடிவுக்கு வருவாள்?

(ii) செப்புச் சல்பேற்றுக் கரைசலுக்கும் இரும்புக்கும் இடையேயான தாக்கவீதத்தில் வெப்பநிலையின் செல்வாக்கை தேடியறிய முற்பட்டாள். இதற்காக மேற்கொள்ளக் கூடிய செயற்பாட்டின் படிமுறைகளைச் சுருக்கமாக எழுதுக.

(iii) செப்புச் சல்பேற்றுக் கரைசலுக்கும் மக்னீசியத்துக்கும் இடையேயான தாக்கத் துக்கான சமப்படுத்திய இரசாயனச் சமன்பாட்டை எழுதுக. (தாக்கிகளினதும் விளைவு களினதும் பௌதிக நிலைகள், நியமக் குறியீடுகள் என்பன சமன்பாட்டில் குறிப்பிடப் படல் வேண்டும்)

(iv) இரசாயனத் தாக்க வகைகளுள் மேலே (iii) இற் குறிப்பிட்ட இரசாயனத் தாக்கம் எவ்வகைக்குரியது?

(B) மக்னீசியம் உலோகத்தின் மூலர்த் திணிவு 24g $mol^{-1}$ ஆகும்.


(i) மக்னீசியம் உலோகத்தின் மூலர்த் திணிவு 24 g $mol^{-1}$ என்பதாற் கருதப்படுவது யாது?

(ii) மக்னீசியம் அணுவொன்றின் திணிவைக் காண்க. அவகாதரோ எண் எனக் கொள்க

(iii) 6g திணிவுடைய Mg துண்டில் அடங்கியுள்ள Mg அணு மூல் எண்ணிக் கையைக் காண்க

(iv) கரைசல் ஒன்றின் உள்ளடக்கத்தை செறிவின் அடிப்படையில் வெளிப்படுத்த முடியும். 0.1$moldm^{-3}$ செறிவுடைய செப்புச் சல்பேற்றுக் கரைசலின் 100$cm^{3}$ தயாரிப்பதற்குத் தேவையான $CuSO_4.5H_2O$ இன் திணிவைக் காண்க. ( $CuSO_4.5H_2O$ இன் மூலர்த் திணிவு 249.5 g $mol^{-1}$ ஆகும்)

07.(A) நீர் நிரப்பப்பட்ட பாரிய வாளியொன்றை இரு மாணவர்கள் சேர்ந்து உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு உருவிற் காட்டப்பட்டுள்ளது. இங்கு வாளி இணைக்கப்பட்டுள்ள கயிற்றின் சுயாதீன அந்தத்தில் மெல்லிய கோல் ஒன்று பொருத்தப்பட்டு அதன் மூலம் இழுக்கப்பட்டுள்ளது.



உரு i


(i) இரு மாணவர்களாலும் பிரயோகிக்கப்பட்ட விசையின் விளையுள் விசையின் பருமனைக் காண்க

(ii) மேலே இரு மாணவர்கள் பங்குபற்றல் மற்றும் கப்பியைப் பிரயோகித்தல் என்பவற்றின் மூலம் பெறப்படும் அனுகூலம் யாது?




உரு ii

(iii) மேலே உயர்த்தப்பட்ட வாளி மீண்டும் கீழ்நோக்கி இழுத்துச் செல்லப்படுவதைத் தவிர்ப்பதற்காக விசை பிரயோகிக்கப்பட்ட கோல் கிடைத்தளத்துடன் A,B எனும் இரண்டு ஆணிகளால் உரு ii இற் காட்டியவாறு பொருத்தப்பட்டுள்ளது.




உரு iii

(a) இச் சந்தர்ப்பத்தில் கோல் மீது பிரயோகிக்கப்பட்ட விசை எந்நிலையிற் காணப்படும்.

(b) மேற் குறிப்பிட்ட நிலையில் மூன்று விசைகளும் காணப்படுவதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய காரணிகள் இரண்டு தருக.

(iv) மேலே (iii)(a) இல் காட்டியவாறு இணைக்கப்பட்டிருந்த ஆணிகளுள் B எனும் ஆணி கழன்று விடின்

(a) கோலின் ஆரம்பத் திருப்பத்தைக் காண்க

(b) அத் திருப்பத்தின் திசை யாது?

(V) வெற்று வாளியின் நிறை 50 N. நீர் நிரப்பப்படுவதற்கு முன்னர் வாளி அதன் கனவளவின் 1/3 பங்கு நீரினுள் அமிழ்ந்து காணப்படுகிறது. இச்சந்தர்ப்பதில் ஒரு மாணவனால் பிரயோகிக்கப்படும் விசை 15 N ஆகும்.

(a) மேற்படி சந்தர்ப்பத்தில் வாளி மீது தொழிற்படும் மேலுதைப்பைக் காண்க

(b) வாளியின் அடியிலுள்ள A எனும் புள்ளி நீரினுள் h ஆழத்தில் அமிழ்ந்து காணப்படுகிறது. வளிமண்டல அமுக்கம் π உம் நீரின் அடர்த்தி d உம் புவியீர்ப்பிலான ஆர்முடுகல் g உம் எனின் புள்ளி A மீது தொழிற்படும் அமுக்கம் Pயைக் காண்பதற்கான கோவையை தரப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு எழுதுக


(c) மேலே V(b) இல் வாளியின் அடியில் உள்ள புள்ளி A இற்கான ஆழம் 4 m எனின் A எனும் புள்ளியில் அமுக்கத்தைக் காண்க

(B) ஆடியொன்றின் முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள் ஒன்றின் விம்பம் தோன்றும் விதத்தைக் காட்டுவதற்காக வரையப்பட்ட கதிர்ப்படம் கீழே தரப்பட்டு ள்ளது.

(i) மேலே கதிர்ப்படத்தில் A,B,C ஆகிய புள்ளிகளைப் பெயரிடுக

(ii) இங்கு காட்டப்பட்டுள்ள கதிர்ப்படத்தின் படிவிம்பத்தின் இயல்புகள் இரண்டு தருக.

(iii) இப்படத்திற் காட்டப்பட்டுள்ளவாறு விம்பம்தோன்றும் விதம் அன்றாட வாழ் வில் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டுதருக.



# ாவை திணறடிக்க தீவிரமாகும் கிம்

**ியாக தாக்குதல் நடத்த வடகொரியா ளது. குறித்த புதுவித சண்டையானது யான பாதிப்பை ஏற்படுத்தும்.**

கொரியாவில்
ாவிற்கு தப்பிச்
தலைவர் கிம்
தென் கொரியா
மாத இறுதியில்
ளைப் பறக்க விட்


சுரங்கள் பறந்து
த வடகொரியா,
தனது எல்லை
கவல் தொடர்பு
வைத்துதகர்த்தது.
ஆண்டு ஒப்பந்
க அறிவித்தது.

தென் கொரியாவுக்கு பதிலடி தர வேண்டிய நேரம் வந்தாகி விட்டதாகவும் அறிவித்தது.

தற்போது வடகொரியாவில் தென் கொரியாவுக்கு எதிராக 1.2 கோடி துண்டுப் பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவற்றை 3000 பலூன்களில் கட்டி அனுப்பும் முடிவில் வடகொரியா உறுதியாக உள்ளது. இதனால், கொரிய தீபகற்பத்தில் மீண்டும் உளவியல் மோதல் உருவாகும் நிலை ஏற்படலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடகொரியா தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமெனவும் தென் கொரியா வலியுறுத்தியுள்ளது. (2)




ர்
பு

ந்தும்
சன்று
னால்
ாமாக
மயத்
ற்றில்
அங்கு
உள்
(2)

வ
ா

## ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங்டன்

# சிலையை சேதப்படுத்திய போராட்டக்காரர்கள் அமெரிக்காவில் பெரும் பரபரப்பு





(வோஷிங்டன்)

மேரிலாந்து மாகாணம் பால்டிமோர் நகரில் உள்ள அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங் டனின் சிலை மற்றும் அவரது நினைவிடம் சேதப்படுத்தப்பட்டது. இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அமெரிக்காவில் மின்னாபொலிஸ் நகரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டபோது கறுப்பினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ்ஃபிலாய்ட் என்ற வாலிபர் உயிரிழந்ததைக் கண்டித்து அந்த நாடு முழுவதும் போராட்டம் நடந்து வருகிறது. இந் நிலையில், போராட்டத்தின் ஒரு பகுதியாக, காலனியாதிக்கம் மற்றும் கறுப்பின அடிமைத் தனத்தின் சின்னங்கள் சேதப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மேரிலாந்து மாகா ணம் பால்டி மோர் நகரில் உள்ள அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங்டனின் சிலை மற்றும் அவரது நினைவிடம் நேற்று முன்தினம் சேதப்படுத் தப்பட்டது. ஜோர்ஜ் வோஷிங்டனின் சிலை,மீது சிவப்பு சாயம் பூசிய போராட்டக்காரர்கள் இனவெறிக்கு எதிரான வாசகங்களை எழுதி வைத்தனர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. (2)

ாதிக்
களை
லில்
முதல்
ன.
கோ
அடு
றது.
ாக்கு
ளில்
ந்துள்
க்சிக்
பலி
கை 21
(2)

# ஹஜ் யாத்திரை இரத்து செய்யப்படாது


## சவுதி அரேபியா

(ரியாத்)

இந்த ஆண்டுக்கான ஹஜ் யாத்திரை இரத்து செய்யப்படாது என சவுதி அரேபிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இருந்த போதிலும் ஹஜ் கடமையை நிறைவேற்ற மிக குறைவான நபர்களே அனுமதிக்கப்படுவர் என்றும் அந்த அரசாங்கம் தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், சவுதி அரேபியா இந்தத்தீர்



மானத்தை அறிவித்துள்ளது.

முஸ்லிம் சமூகத்தினரின் வருடாந்தர 'ஹஜ்' புனித யாத்திரை எதிர்வரும் ஜூலை இறுதியில் தொடங்கவுள்ளது. இந்தக் காலகட்டத்தில் மக்காவில் தொழுகை நடத்துவதற்காக உலகம் முழுவதும் இருந்து சுமார் 20 இலட்சம் பேர் சவுதி அரேபியாவுக்கு படையெடுப்பர்.இந்நிலையில் தற்போது கொரோனா நோய்த் தொற்று பிரச்சினை நிலவுகின்ற போதிலும் இவ்வருடம் ஹஜ் யாத்திரை இரத்து செய்யப்படாது என்றும் ஹஜ் கடமையை நிறைவேற்ற மிகக் குறைவான நபர்களே அனுமதிக்கப்படுவர் எனவும் சவுதி அரேபியா தெரிவித்துள்ளது.

ஏற்கனவே சவுதி அரேபியாவில் தங்கியுள்ள வெளிநாட்டினர் மட்டுமே ஹஜ் கடமையை நிறைவேற்ற அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

05

கலாநிதி முருகர் குணசிங்கம்

பன்னாட்டு நவீன முற்போக்குப் பொருளியல் கோட்பாடுகளால் நெறிப்படுத்தப்பட்டு புவிசார் அரசியல் வளர்ச்சிக்குத் துணை செய்வதாக ஆக்கப்பட்டு இருக்கின்றது. 1989 நவம்பர் 9 அன்று நிகழ்ந்த பெர்லின் சுவர் இடிப்பு 1991 இல் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டு 15 புதிய நாடுகள் உதயம் ஆகிய இரண்டு நிகழ்வுகளையும் மேற்குலக முதலாளித்துவம் தனக்கு ஏற்றம் தருபவை எனக் கொண்டாடி மகிழ்ந்தது. பன்னாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு உலகளாவிய திட்டத்தை வகுத்தது.

பனிப்போர் முடிவு, கம்யூனிச அழிவு இவை இரண்டினாலும் ஏற்பட்ட விளைவுகள் பலதரப்பட்டன. 1990 களின் தொடக்கத்தில் மூன்றாம் உலகத்தின் சிறிய நாடுகளுக்கு சோவியத் யூனியன் அளித்து வந்த ஆதரவு அறவே நிறுத்தப்பட்டது. அதில் இருந்து புதிதாக விடுதலை பெற்ற நாடுகளில் வெடித்த இனக்கலவரங்கள், சோசலிஸ்ட் (மார்க்சிஸ்ட்) நாடுகள் பிரிந்ததால் ஏற்பட்ட புவிசார் அரசியல் விளைவுகள், இனக்கலவரம், இனப்படுகொலை, இன அழிப்பு நடவடிக்கைகளின் விளைவாக மக்கள் தமது நாடுகளை விட்டு வெளியேறியதால் ஏற்பட்ட உலகளாவிய அகதிகள் பிரச்சினை, முதலாளித்துவ நாடுகள் செய்துகொண்ட பல்வேறு வணிக ஒப்பந்தங்கள் என்பவை அவற்றுள் அடங்கும்.

இதே காலகட்டத்தில் முதலாளிகளும் வணிகக் கழகச் செயல் அதிகாரிகள், இடைநிலை மேலாளர்கள், மாணவர்கள், பொறியாளர்கள், கணனி வல்லுநர்கள் உள்ளிட்ட உயர்திறன்மிக்கவர்களும் தங்களுக்கு வசதியான நாடுகளுக்குச் செல்லத் தொடங்கிய உலகளாவிய புலம்பெயர்வு வேகமாக உயர்ந்தது. அதற்குப் பன்னாட்டு உறவுகள் துணைநின்றன. பொருளாதார உதவிகள், தொலைத்தொடர்பு வசதிகள், புதிய தொழில் நுட்பங்கள் ஆகியவை ஊக்கம் அளித்தன.

இந்தக் காலத்தில் மேலும் ஒரு நிகழ்வும் நடைபெற்றது. நாடு விட்டு நாடு பெயர்ந்தவர்கள் பன்னாட்டு எல்லைகளைச் சட்டவிரோதமாக தரைவழியாகவோ, கடல் வழியாகவோ, வான்வெளியாகவோ கடந்து செல்ல முற்பட்டார்கள். இன, மதச் சண்டைகளின் கொடுமைக்கு ஆளானவர்களில் பலர் இறையாண்மைக்கு அடங்கித் தங்கள் நாட்டிலேயே அடைக்கலம் பெற்றார்கள். இத்தகைய நிகழ்வுகள் ஐரோப்பாவில் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து நடைபெற்று வருகின்றன.

1725 ஆம் ஆண்டுகளிலேயே புகலிடம் பெறுவதற்கான உரிமை ஆவணப்படுத்தப்பட்டது. இருபதாம் நூற்றாண்டில் முதலில் சர்வதேசக் குழுவிலும் பின்னர் ஐக்கிய நாடுகளிலும் சட்டப்படியாக உறுதி செய்யப்பெற்ற அகதிகளுக்கு அரசியல் பாதுகாப்பு வழங்குவதற்கான சட்டங்கள் ஏற்பட்டுள்ளன.

1917 ஆம் ஆண்டில் போல்ஷ்விக் புரட்சியின் **(Bolshevik)** காரணமாக ரஷ்ய நாட்டை விட்டுப் பலர் அகதிகளாக வெளியேறினர். தொடர்ந்து இத்தாலி, ஸ்பெயின் போன்ற பாசிச நாடுகளின் சர்வாதிகார ஆட்சி, இனவெறி ஆகியவற்றில் இருந்து தப்புவதற்காக ஏராளமான மக்கள் வெளியேறினர். 1930களின் நடுப் பகுதியில் இருந்து 1940களின் நடுப்பகுதி வரை ஜேர்மனி நாட்டின் நாசிசத்தில் இருந்து தப்புவதற்காகவும் ஜேர்மனியின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான மற்றைய மேற்கு, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் நாசிசக் கொடுமைகளில் இருந்து தப்புவதற்காகவும் அந்த நாடுகளில் இருந்த யூதர்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறினர்.

அவர்களுக்கு எந்த நாடும் அகதிகள் என்ற அங்கீகாரமோ அரசியல் புகலிடமோ கொடுக்க முன்வரவில்லை என்பது அதிர்ச்சி தரும் செய்தி ஆகும். நவீன காலத்தில் நிகழ்ந்த உலகளாவிய கும்பல் கும்பலான இன அழிப்பின் மூலம் 60 இலட்சம் யூதர்கள் திட்டமிட்டுக் கொல்லப்பட்டார்கள். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய உலகளாவிய அகதிகள் சிக்கலுக்கு, போஸ்னியாவில் நடைபெற்ற இன ஒழிப்பும் ருவாண்டாவில் நடைபெற்ற இனப்படுகொலை, கிழக்கு ஐரோப்பா, மத்திய ஆசியா, தென் ஆசியா, சகாராவை அடுத்த நாடுகள், ஆபிரிக்காவின் மேற்குக் கிழக்கு நாடுகள், கொங்கோ, சியாரா லியோன், லைபீரியா, சோமாலியா, எரித்திரியா, ருவாண்டா ஆகிய நாடுகளில் தொடங்கிய உள்நாட்டுப் போர்களுமே காரணம்.

இனவெறி, சர்வாதிகாரம், கொடுங்கோண்மை ஆகியவற்றால் ஹெய்த்தி, ஆப்கானிஸ்தான், திபெத், காஷ்மீர், ஈராக், லைபீரியா,. கொசோவா, போஸ்னியா, இலங்கை (தமிழர்கள்) ஆகிய நாடுகளில் இருந்து சிறுசிறு குழுக்களாக அகதிகள் வெளியேறத் தொடங்கினார்கள். அங்கெல்லாம் இராணுவ வன்முறை, இன எதிர்ப்பு, மதக்கலவரம் ஆகியவை அரசாங்கத்தால் திட்டமிட்டுத் தூண்டி விடப்பட்டன.

பிறந்த நாடுகளில் இருந்து வெளியேறி அயல் நாட்டில் வாழும் அகதிகள் எண்ணிக்கை 1990 ஆம் ஆண்டில் உலகம் முழுவதுமாக 15.4 கோடி. 2000 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் கணக்கெடுப்பில் உலகம் முழுவதும் 17.5 கோடி அகதிகள் இருந்தார்கள். 2006 இல் அந்தத் தொகை 20 கோடியாக உயர்ந்து விட்டது. குடும்பத்தினரிடம் இருந்தும் உற்றார், உறவினரிடம் இருந்தும் பிறந்த தாய்நாட்டில் இருந்தும் பிரிக்கப்பட்டு வேற்று நாடுகளில் தஞ்சம் புகுந்து உலகம் முழுவதும் வாழ்ந்து வருவோர் புலம்பெயர்ந்தோர் **(Diaspora)** ஆவார்கள். புலம்பெயர்வதும் இடம்பெயர்ந்து சிதறுண்டு வாழ்வதும் உலக முதலாளித்துவத்தின் கூறுகள் ஆகும். தொழிலாளர்கள் உலகம் முழுமையும் பரவுவது உற்பத்தியான பண்டங்களும் செல்வமும் நாடுகளின் எல்லையைத் தாண்டி விற்பனையாவது பன்னாட்டு நிதியம் **(IMF)** பலப்படுத்தப்பட்டது. பண்டங்களிலும் சேவைகளிலும் உலக வணிகம் சீராக்கப்பட்டது ஆகிய காரணங்கள் மனிதவளம் பெருமளவு புலம்பெயர்வதற்கு வழிவகுத்



தன. சில பெயர்வுகள் அந்த மக்களே விரும்பி மேற்கொண்டவை. வேறு சில பெயர்வுகள் விருப்பம் இல்லாமலே வன்முறைக்குத் தப்புவதற்காகவும் அரசியல் அடக்குமுறைகளில் இருந்து விடுபடுவதற்காகவும் மேற்கொண்டவை.

புலம்பெயர்வு, இடப்பெயர்வு, மக்கள் தொகைச் சிதறல் ஆகியவற்றை ஆராய்வோர் அகதிகள் எனப்படுவோர் துன்புறுத்தப்படுதல், அரச வன்முறை, அதனை எதிர்த்து உருவாகும் உள்நாட்டுக் கலவரம், அரசியல் அடக்குமுறை, சட்டவிரோதமான சிறைபிடிப்பு, சித்திரவதை ஆகிய காரணங்களால் பிறந்த நாட்டில் இருந்து வெளியேறி வேறொரு நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் புகலிடம் வழங்கப்பட்டோர் என வரையறுக்கின்றார்கள்.

உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தை **(Universal Declaration of Human Rights)** ஐக்கிய நாடுகள் 1948 டிசெம்பரில் வெளியிட்டது. அதைத் தொடர்ந்து 1951 மே மாதம் 28 ஆம் திகதி அகதிகள், நாடற்ற மக்கள் ஆகியோரின் நிலை குறித்த மாநாட்டை நடத்தியது.

1951 ஜூலை 28 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபை உறுதிமொழித் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதுடன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் **(United Nation Human Rights Commission - UNHCR)** ஒன்றையும் நிறுவியது.

அகதி அல்லது நாடற்ற மனிதர் யார் என்பதைப் பின்வருமாறு வரையறுத்தது.

"இனம், மதம், தேசியம் அல்லது ஏதேனும் ஒரு சமூகக் குழுவில் அங்கம் வகிப்பது காரணமாகவோ அரசியல் காரணங்களுக்காகவோ கொடுமைப்படுத்தப்படுவோம் என அச்சமுற்று தன் தேசிய இனம் வாழும் நாட்டினின்றும் வெளியேறி அல்லது அச்சம் காரணமாக அந்த நாட்டின் பாதுகாப்பைப் பெற விரும்பாமல் அல்லது தனக்கென்று ஒரு தேசிய இனம் இல்லாமல் தான் அதுவரை வாழ்ந்து வந்த நாட்டில் இருந்து மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக வெளியேறி அங்கு திரும்பிச் செல்ல இயலாமலோ அல்லது திரும்பிச்செல்ல விருப்பம் இல்லாமலோ இருப்பவரே அகதி அல்லது நாடு அற்ற மனிதர்"

மேற்கண்ட பிரகடனம் 1954 ஏப்ரல் 22 அன்று நடைமுறைக்கு வந்தது.

ஒரு நாட்டின் குடிமக்கள் அங்கு குடியேறி வாழும் பிற மக்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் உரிமைகளில் பலவற்றில் அகதிகளுக்கும் உரிமைகளை உறுதி செய்தது.

அதன்படி இனம், மதம், பிறந்த நாடு ஆகியவை காரணமாக அடிப்படை உரிமைகள் மறுக்கப்படக் கூடாது. வழிபாடு, விரும்பிய மதத்தினைப் பின்பற்றுவதற்கான உரிமை, தொடர்ந்து அங்கேயே வசிப்பதற்கான உரிமை, தன் தனிப்பட்ட சமூக நிலையைச் சட்டப்படி பாதுகாத்துக் கொள்வதற்கும் மணம் புரிந்து கொள்வதற்கும் அசையும்-அசையாத சொத்துக்கள் வைத்துக் கொள்வதற்குமான உரிமை, கலை-அறிவுசார் சொத்து உரிமை, சாங்கங்களாகவோ சபைகளாகவோ கூடிப் பேசுதல், தொழில் செய்து பொருள் ஈட்டுதல், சுயதொழில் செய்யவும் பயிற்சி பெற்ற தொழிலை மேற்கொள்வதற்குமான உரிமை, பொதுநலச் சேவை, வீடு, பொதுவான கல்வி ஆகியவை பெறுவதற்கான உரிமை, துயர் தீர்ப்பதற்கான உதவிகள், தொழில் சட்டத்திற்கான உதவி, அரசு பாதுகாப்பு ஆகியவற்றைப் பெறுவதற்கான உரிமை ஆகியவை அவற்றுள் அடங்கும்.

அத்துடன் அரசாங்க உதவி, இடம் மாறிச் செல்வதற்கான உரிமை, அடையாள ஆவணங்கள், கடவுச்சீட்டு, விசா போன்ற பயண ஆவணங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கான உரிமை, தேவையில்லாத கட்டணங்களும் வரிகளும் விதிக்கப்படாமல் இருக்கும் உரிமை ஆகியவையும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

புகலிடம் அளித்து இருக்கின்ற நாடுகள் அகதிகளால் அந்த நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து அல்லது அச்சுறுத்தல் நேர்ந்தால் அன்றி அல்லது அவர்கள் அந்த நாட்டுச் சட்டங்களுக்கு எதிராகப் பெருங்குற்றங்களில் ஈடுபட்டால் அன்றி அவர்களை வெளியேற்றாமல் தடுக்கின்றது.

அப்படி அத்தகைய காரணங்களுக்காக அவர்கள் வெளியேற்றப்பட்டாலும் அவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அச்சத்திற்கு ஆளாக்கப்பட்ட அவர்களின் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பக்கூடாது என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

(தொடரும்)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெறுவது தொடர்பில் உறுதியான தகவல்கள் கிடைத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை

# மைத்திரியை சாடிய கிரியெல்ல

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெறுவது தொடர்பாக உறுதியான தகவல்கள் கிடைத்த போதிலும் மைத்திரி எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை என முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டினார்.**



தெல்தெனியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, "முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அப்போதைய அரசாங்கத்தை பழிவாங்கும் எண்ணத்திலேயே இருந்தார்.

இதனால்தான், அவருக்கும் பாதுகாப்புச்சபைக்கும் தாக்குதல் குறித்த எச்சரிக்கை முன்கூட்டியே கிடைத்த போதும், அவர் அதனை பிரதமருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கும் தெரிவிக்கவில்லை.

சிறிசேன இத்தகைய எச்சரிக்கைகளை புறக்கணித்து இந்தியா சென்றார். இந்த விடயம் குறித்து எவருடனும் எதனையும் பேசவில்லை.

அதனைத் தொடர்ந்தே தாக்குதலை தடுக்கத் தவறியதாக அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

மேலும், இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் கோட்டாபய, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்பத்தை வெளியிட்டார். இந்த நடவடிக்கைகள் அப்போதைய முப்படைத் தளபதியான சிறிசேன மற்றும் பொதுஜனபெரமுன இணைந்து திட்டமிட்ட விதத்தில் முன்னெடுக்கப்பட்டன" என அவர் தெரிவித்தார். (ஜ-4)




### அடியவர்களை காப்பவன்

நயினை என்ற சொல்லுக்கே நாவினிக்கும்
மனம் கனிக்கும் தாயே.
போன ஜென்மத்தில் செய்த பாவத்துக்காய்
இந்த பிறப்பில் தண்டனை தந்தாயே தாயே
துரோகிகளையும் எதிரிகளையும் உலகிற்கு
வெளிச்சம் போட்டு காட்டிய தாயே
அலை கடல் நடுவே ஒய்யாரமாய்
அரசியாக காட்சி அளிக்கும் தாயே
உன் கடைக்கண் பார்வை பட்டால் போதும்
எம் துன்பங்கள் பறந்து ஓடும் தாயே
மீண்டும் ஒரு அவதாரம் எடுத்து கொடிய
கிருமிகளை அழிதாயே!

நவாலி
ம.ஞானாம்பிகை

### நயினை நாகபூஷணித் தாயே

முத்தேவிகளுள் முதலானவள்
முனிவர்களின் தாயானவள்
நான் மறைகளின் நாயகி
நடராஜரின் சேவகி
மாதர்கள் போற்றும் மாதேவி
மாவிலையில் வீற்றிருக்கும் ஸ்ரீதேவி
நயினையில் உறைந்திடும் நவசக்தி
நாவினிலே ஒலிக்கும் ஓம் சக்தி

லிங்கேஸ்வரன் ஜனார்த்தன்
மறவன்புலோ மத்தி.

### அபயம் நீயே நாகேஸ்வரி

அலை வந்து தாலாட்டும் சிறு தீவிலே...
அருள் மழை பொழியும் எங்கள் நாகம்மா...
நிலை தடுமாறி நிற்கும் மனுக்குலம்...
நிம்மதி பெறவுன் கடைக்கண் பாரம்மா...

பாம்பாய் வேம்பாய் பணிபவர்க் கருளி...
வீம்பாய் வரும் கொடு வினைகளை
களைவாய்...
தேம்பாதிருக்க இம் மாநிலத்தோர் - நீயும்
காம்பாகிப் பூவுலகை தாங்கிடம்மா

அரவம் தின்னிகள் அள்ளி வைத்தார்
அகிலத்தில் பல இலட்சம்
உயிருக்கு கொள்ளி வைத்தார்
நர பலி கொள்ளும் நோய்க் காலன் - இந்த
நல்லுலகை விட்டோட விரட்டிடம்மா

கா. தவராஜசுந்தரம்
கிளி/அக்கராயன் ம.வி.



# ஆன்மீகம்

## அன்பே வாழ்வின் ஆதாரம்!



உயர்திணையாகிய மானிடப் பிறவியைப் பெற்ற நாம் நற்பண்புகளின் சங்கமம் ஆகி நாளும் நாளும் உயர வேண்டும்.

**"இன்மையினின்று உண்மையை**
**நோக்கிச் செல்!**
**இருட்டிலிருந்து வெளிச்சத்தை**
**நோக்கிப் புறப்படு!**
**மரணத்தினின்று மரணமற்ற நிலை**
**பெறு!"**

என்று பிரகதாரண்ய உபநிடதம் பேசுகிறது. உப நிட்தம் உரைப்பதை நம் தமிழ் மொழியோ ஒரு வார்த்தையிலேயே விளக்கி விடுகிறது. எப்படி என்கிறீர்களா?

ஆறறிவு பெற்ற ஆண், பெண்களாகிய நம்மை "உயர்திணை" எனச் செம் மொழித் தமிழ் செப்புகிறது. "உயர்திணை என்பது முக்காலத்தையும் குறிக்கும் வினைத் தொகை என்கிறது தமிழ் இலக்கணம். விளக்கமாகப் பார்த்தால் நாம் விளங்கிக் கொள்ளலாம்.

உதாரணமாக "ஊறுகாய்" என்றால் ஏற்கனவே எண்ணெய், மிளகாய்ப் பொடியில் ஊறுகாய் தற்போதும் ஊறுகின்ற காய், இனி மேலும் ஜாடியில் ஊறப்போகும் காய் என்று பொருள். மேலும் ஒன்று பார்க்கலாம்.

"சுடுகாடு" என்றால் பலரை இதுவரை சுட்டகாடு. இன்றும் பலரைச் சுட்டுக் கொண்டிருக்கும் காடு.

இனி நாளை நம்மையும் சுடப் போகும் காடு என்று பொருள். வார்த்தையிலேயே முழு வாழ்க்கையையும் விளக்கி விடுகிறது நமது வண்ணத் தமிழ் மேற்கண்டவாறே உயர்திணை என்றால் பிறப்பிலேயே உயர்ந்த இன்றும் உயர்கின்ற நாளை, நாளை மறுநாளும் உயர்ந்து கொண்டே போகின்ற திணை என்று பொருள்.

அர்த்தம் அறிந்து கொண்டு அதன்படி உயர்வது தானே அர்த்தமுள்ள வாழ்க்கை. அன்பு, இரக்கம், மனிதநேயம், அகிம்சை, ஆணவமின்மை, வீரம், ஒழுக்கம், விவேகம், கடமையுணர்வு, நாட்டுப் பற்று, தொழில் ஈடுபாடு எனப் பன்முகப் பண்புகள் நம்மிடம் பளிச்சிட வேண்டும். (தொடரும்.....)

# தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதே கருணாவின் கருத்திற்கான நோக்கம்

## லால்காந்த குற்றச்சாட்டு



**(கொழும்பு)**

**வடக்கில் சிங்கள மக்களுக்கு எதிராகவும் தெற்கில் தமிழ் மக்களுக்கு எதிராகவும் கருத்துக்களைத் தெரிவித்து அதிகாரத்தை பெற்றுக்கொள்ளவே அரசாங்கம் முயற்சிக்கின்றது. அதன் ஓர் அங்கமாகவே கருணா அம்மானின் பேச்சும் இடம்பெற்றிருக்கின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் லால்காந்த குற்றஞ் சாட்டினார்.**

ஆனையிறவு முகாமில் இராணுவத்தினரை கொலை செய்ய கட்டளையிட்டதாக கருணா அம்மான் தெரிவித்திருக்கும் சர்ச்சைக்குரிய கூற்று தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆனையிறவுமுகாமை விடுதலைப்புலிகள் தாக்கும்போது அங்கிருந்த இரண்டாயிரம் இராணுவ வீரர்களை கொலை செய்யுமாறு கட்டளையிட்டதாக கருணா அம்மான் திகாமடுல்ல பிரதேசத்தில் தெரிவித்ததை நானும் கேட்டேன். அத்துடன் அவரை தேசியப் பட்டியலில் வருமாறு மகிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டதாகவும் அதனை மறுத்து மக்களின் ஆணையுடன் வெற்றிபெற்று, அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

அவர் பாதுகாப்பு படையினருக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளவே இவ்வாறு செயற்படுகிறார்.

கருணா அம்மான் தெரிவித்த கருத்து பாரதூரமானவைதான் என்றாலும் தற்போது அவர் இராணுவத்துக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதே அவரின் நோக்கமாக இருக்கவேண்டும் என அவர் குற்றம்சாட்டினார். (ஜ-4)

# 20 மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகளை அச்சிடும் பணி நிறைவு

(கொழும்பு)

பொதுத்தேர்தலை முன்னிட்டு 20 மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகளை அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் குருநாகல் உள்ளிட்ட மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டு வருவதாக அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு மாவட்டத்திற்கான வாக்காளர் அட்டைகளை அச்சிடும் பணிகள் 50 வீதம் நிறைவடைந்துள்ளது. இதுவரை 13 மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகள், தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மாத்தளை, நுவரெலியா, மாத்தறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, அநுராதபுரம், பொலநறுவை, இரத்தினபுரி, கேகாலை, காலி, அம்பாந்தோட்டை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகள் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

திகாமடுல்ல மற்றும் மொனராகலை தேர்தல் மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகள் இன்றைய தினத்திலும் வன்னி தேர்தல் மாவட்டத்திற்குரிய வாக்காளர் அட்டைகள் நாளைய தினத்திலும்தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்படும் என அரச அச்சகர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-8)

# பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் உள்ளூராட்சி மன்ற பதவிகளிலிருந்து விலகவேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்து

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் போட்டியிடும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை தங்களது பதவியில் இருந்து விலகுமாறு தேர்தல்கள் ஆணைக் குழு அறிவுறுத்தியுள்ளது.

குறைந்தபட்சம் அவர்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் விடுமுறையையேனும் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இராஜாங்க அமைச்சர்கள் பயன்படுத்திய அரசாங்க வாகனாங்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு அனைத்து அமைச்சின் செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் அறிவித்துள்ளது. (ஜ-8)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## ஈகை குணம்!

ஒரு ராஜாவைத் தேடி வந்தார் ஒருவர்.

வாங்க என்ன விசயம்?- என்றார் ராஜா. எனக்கு ரொம்ப பசிக்கிறது? என்றார் வந்தவர். அதனால் என்ன. இங்கே எல்லா வகையான உணவும் இருக்கு. உங்களுக்கு என்ன வகையான உணவு வேண்டும்? என்றார் ராஜா. எனக்கு மாமிச உணவு சாப்பிட வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. அதனாலே அதுமாதிரி உணவு கிடைத்தால் பரவாயில்லை என்றார். அதுமாதிரி உணவே கிடைக்கும்படியாக செய்கிறேன். தங்களுக்கு எந்த மிருகத்தின் மாமிசம் வேண்டும்? என்று கேட்டார். எனக்கு இன்றைக்கு நரமாமிசம் சாப்பிட வேண்டும் போல ஆசையாக இருக்கு. அதனாலே இன்றைக்கு மனித மாமிசம் கிடைத்தால் பரவாயில்லை என்றார். அந்த ராஜா இதைக் கேட்டதும் கொஞ்சம் கூட யோசிக்கவேயில்லை.

"அப்படியே செய்கிறேன். கொஞ்சம் இப்படி உட்காருங்கள்!" என்று சொல்லி விட்டு அரண்மனைக்குள்ளே போனார் ராஜா. அங்கே அந்த ராஜாவினுடைய பிள்ளை உட்கார்ந்திருந்தான். அவனைப் பார்த்து "மகனே! வந்திருக்கிறவர் நர மாமிசம் கேட்கிறார்" என்று சொன்னார் அவ்வளவுதான். அவன் என்ன செய்தான் தெரியுமா? கொஞ்சம்கூட யோசிக்கவில்லை, தயங்கவுமில்லை. "அதனாலே என்ன அப்பா. என்னையே வெட்டி அவருக்குக் கொடுத்து விடுங்க" என்று சொன்னான். உடனே அந்த ராஜா அதேமாதிரி செய்து ஒரு தங்கத் தட்டிலே வைத்து அதைக் கொண்டு போய் உட்கார்ந்திருந்தவர் முன்னால் வைத்தார். உடனே என்ன நடந்ததாம் தெரியுமா?

வந்திருந்தவர் கடவுளாக மாறினார். ஆசீர்வாதம் செய்தார். மகனையும் உயிர் பிழைக்க வைத்துவிட்டு கடவுள் போய்விட்டார். அதன்பிறகு அமைச்சர்கள் எல்லாம் ராஜாவிடம் வந்தார்கள். "அரசே இப்படி தானம் செய்கிறீர்களே. யார் எதைக் கேட்டாலும் கொடுத்து விடுகிறீர்களே. எதற்காக இப்படி செய்கிறீர்கள். என்ன பலன் கருதி இப்படித் தானம் செய்கிறீர்கள்?"

எந்த புண்ணிய உலகத்தை அடைவதற்காக இப்படிச் செய்கிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அந்த ராஜா சொன்னார்... "நான் எந்தப் பலனைக் கருதியும் தானம் செய்யவில்லை. தானம் செய்கிறது என்னுடைய சுபாவம். தானம் கொடுத்தால்தான் எனக்கு மகிழ்ச்சியும் மன நிம்மதியும் ஏற்படுகிறது. எப்படி பொருள் மீது ஆசையுள்ளவர்கள் அது கிடைக்கவில்லை என்று மனக்கவலை அடைகிறார்களோ அதுமாதிரித்தான் தானம் கொடுக்கவில்லை என்றால் நான் மன நிம்மதியை இழந்து விடுவேன். இது என்னுடைய கெட்ட குணம் என்று வைத்துக் கொண்டாலும் சரி" என்றார்.

இந்தி நூலிலே இந்தக் கதை வருகிறது. இந்தக் கதையைக் கேட்டதும் நமக்கு என்ன தோன்றும்? இது நடைமுறைக்குச் சாத்தியமான விடயம் என்பது சந்தேகம்தான். வருகிறவன் சாப்பாடு கேட்கிறான் என்பதற்கு மகனையே வெட்டிக் கொடுக்கிறது வேடிக்கையாக இருக்கிறது. இந்தக் காலத்திலே அப்படியெல்லாம் செய்தால் எல்லாரையும் உள்ளே தள்ளிவிடுவார்கள். இருந்தாலும் இதிலே விடயம் அது இல்லை. எதையும் எதிர்பாராமல் செய்கின்ற ஈகைக் குணம் இருக்குப் பாருங்கள் அப்படி ஒரு சிறந்த மனப்பான்மை எப்படிப்பட்டது என்பதை நமக்குப் புரிய வைக்கிறதுக்காகத்தான் இந்தக் கதை.

அந்த நூலிலே சொல்லுகிறார்கள் இது தான் .அதாவது பிரதி பலனைக் கருதாது காரியம் செய்தல்.

அது சரி இந்த கதையிலே வந்த ராஜா யார் தெரியுமா? அவர் தான் சிபிச்சக்கரவர்த்தி. புறாவை காப்பாற்றுவதற்காக தன்னையே வேடனுக்கு கொடுத்தவர். அந்தச் சிபிச்சக்கரவர்த்தி தான்.

இந்தக் காலத்திலேயெல்லாம் அப்படிப்பட்ட மனப்பான்மையோடு யார் இருக்கிறார்கள்.

இந்தக்காலத்திலே ராஜாக்கள் இருந்தால் எப்படி நடக்கும் தெரியுமா? இப்படித்தான் நடக்கும்.

ஒரு ராஜா இன்னொரு நாட்டுக்கு சமாதானப் புறாவை தூது அனுப்பினார்.

அப்படி அனுப்பினால் அடுத்த வாரமே அந்த நாட்டோட சண்டை போடுறதுக்கு கிளம்பிட்டாங்களே. அப்படி என்று கேட்டார்கள்.

"அட நீங்கள் வேறே.சமாதானத்துக்காக அனுப்பினால் புறாவையும் அந்த ஆளு சமைத்து சாப்பிட்டுட்டான்.அதுக்காகத்தான் இந்தப் போர்" அப்படி என்று சொன்னார்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# யாழ்ப்பாண கீரை வகை மூலிகைகளும் அவற்றின் மருத்துவ முக்கியத்துவங்களும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆரோக்கிய வாழ்வின் இரகசியம் எளிமையான வாழ்வியல் முறையாகும். எமது சமூக அமைப்பில் வசதி கூடக் கூட துன்பியல் அம்சங்கள் மலிந்திருப்பதை காணலாம். பல வகை உணவுக் கூறுகளை ஒன்று சேர்த்து தயாரிப்பதனூடாக குறைந்த செலவில் நிறையுணவை தயாரிக்கலாம். நார்ப் பொருட்கள் அடங்கிய உணவுகளை தின உணவில் அத்தியாவசியமாக சேர்த்தல் வேண்டும்.

உ+ம்:- காய்கறி, இலைக் கீரை, பழங்கள் முதலியவற்றை குறிப்பிடலாம். சூரியன் உதயமான நேரத்திலிருந்து 2 மணி நேரத்துக்குள்ளாக காலை உணவு சாப்பிட வேண்டும். சூரிய உதயத்திலிருந்து 6 மணி நேரத்துக்குள் நமக்கு செரிமான ஆற்றல் அதிகமாக இருக்குமென சித்தர்கள் கூறியுள்ளார்கள். அந்த நேரத்தில் உடலுக்கு ஊட்டமளிக்கும் சத்தான உணவுகளை உண்ண வேண்டும்.

அதிகாலையிலே வேலைக்கு செல்பவர்கள் காய்ச்சாறு, இலைக்கஞ்சி, பழச்சாறு, மோர், நீராகாரம் போன்ற திரவ உணவுகளை அருந்தலாம். காலை உணவில் கொழுப்பு, எண்ணெய் இல்லாமலோ அல்லது மிகக் குறைந்தளவில் இருக்க வேண்டும். அதிக் கொழுப்பு, மந்தம் ஏற்படுத்துகின்ற பொருட்கள் காலையில் இருந்தால் மூளை சோம்பலாக இருக்கும். மன குவிப்புத் திறனையும் குறைக்கும். முளைகட்டிய பயறு வகைகள், பழங்கள், அதிகம் இருக்க வேண்டும். மதிய உணவில் கீரைகளும் காய்களும் அதிகளவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

ஒரு நாளிற்குத் தேவையான கீரைகளையும் காய்களையும் மூன்றிலொரு பாகம் பச்சையாகவும் 2 பாகம் வேக வைத்துச் சாப்பிடுவது உடலுக்கு நல்லது, உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்கள் பச்சைக்கீரைகளையும் காய்களையும் சமைக்காமல் உண்ணப் பழகிக் கொள்ள வேண்டும். கீரை, காய்களைச் சாறாகப் பருகலாம். சிறுசிறு துண்டுகளாக வெட்டி மோர், மிளகு, கல் உப்பு, பெருங்காயம் கலந்து சாப்பிடலாம். காய்களுடன் எலுமிச்சைச்சாறு, இஞ்சி, நாட்டுத் தக்காளி, பூண்டு, உப்பு, கறிவேப்பிலை, கொத்தமல்லி இலை கலந்து அரைத்துப் பருகலாம். இப்படிப் பச்சையாகச் சாப்பிடுவதால் அது செரிமானமாவதற்கு உடலிலிருந்து ஆற்றலை (எரிசக்தி கலோரி) எடுத்துக் கொண்டு உடல் எடை குறைய வழியாகும். உடல் ஊட்டம் குறையாமல் எடை குறைய இதுவே மிகச் சிறந்த வழி. காய்களைச் சமைப்பதால் உடலிற்கு தேவையான சில முக்கிய ஊட்டச் சத்துக்கள் கிடைக்காமல் போகின்றன. எனவே அளவான உடல் எடை உள்ளவர்களும் பச்சைக் காய்களைச் சாறாகவோ சிறு துண்டுகளாக்கியோ உண்ண வேண்டும்.



பிண்ணாக்கு கீரை



புளியாரைக் கீரை

### கீரை வகைகளில் பிண்ணாக்குக் கீரை

முக்கியமாக பிண்ணாக்குக் கீரையானது சிறுநீர்த் தாரையில் ஏற்படும் நீர்க் கட்டு, தொற்று, மலச்சிக்கல் போன்றவற்றுக்கு பயன் படுத்தப்படும். வாரத்துக்கு ஒருமுறை இக்கீரையை பயன்படுத்தும் போது பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோய் குணமாகும். இந்தக் கீரையை தனியாகவும் பயன்படுத்தலாம். மற்றக் கீரையுடன் சேர்த்துக் கலப்புக் கீரையாகவும் பயன் படுத்தலாம். கைவிடப் பட்ட தரிசு நிலத்தில் வளரும்.

குறிப்பு:- பிண்ணாக்கு கீரையை அரைத்து மஞ்சள் தூளுடன் கலந்து கால் ஆணிகளில் போட்டால் அவை விரைவில் மறையும்.

பிண்ணாக்கு கீரையுடன் மிளகு, பூண்டு, மஞ்சள் ஆகியவற்றுடன் சேர்த்து சூப் வைத்து குடித்தால் மலச்சிக்கல் குணமாகும்.

### புளியாரைக் கீரை

இக்கீரை மிகவும் குளிர்ச்சியானது. இதனைத் தனியாகக் கடைந்தும் பருப்புடன் சேர்த்து அவித்து கடைந்து பயன்படுத்தினால் உடற் சூடு தணியும்.

புளியாரைக் கீரையுடன் மிளகு, சீரகம், உள்ளி, மஞ்சள் சேர்த்து சூப் போல தயாரித்துக் குடிக்க நன்றாகப் பசி எடுக்கும்.

புளியாரைக் கீரையை அடிக்கடி சமைத்துச் சாப்பிட்டால் வாய்ப்புண், வயிற்றுப் புண் குணமாகும்.

புளியாரைக் கீரையை சாறு எடுத்து அதனுடன் உப்புச் சேர்த்து மீண்டும் மீண்டும் காய்ச்சி வர பாத்திரத்தின் அடியில் உப்பு படியும். அவ் உப்பு படிவத்தை பொடியாக்கி தினமும் 100 மில்லிகிராம் எலுமிச்சம் சாற்றில் கலந்து குடிக்க வயிற்றுவலி, குடற் புண்கள் தீரும்.

புளியாரைக் கீரையையும் துத்தியிலைக் கீரையையும் சேர்த்து கடைந்து சாப்பிட்டு வர இரத்த மூலம் குணமாகும்.

### மணலிக்கீரை

Coisekic photnoceoide

மூட்டு வலிகள் குணமாக மணலிக் கீரை சிறந்த இலைக் கீரையாகும். மணலிக் கீரையுடன் சுக்கு, மிளகு, திப்பிலி, சிற்றிலத்தை, பனை வெல்லம் சேர்த்து பருகி வர மார்புச் சளி, மார்பு நோ, தொண்டை வலி, தாபிதம் குணமாகும்.

அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள் மணலிக் கீரைச் சாற்றில் சின்னச் சீரகத்தை ஊற வைத்து உலர்த்தி பொடித்து காலை, மாலை உண்டு வர இரத்த அழுத்தம் சீராகும்.

இக்கீரையை மற்றைய காய்கறிகளுடன் சேர்த்து மிளகு, உள்ளி சேர்த்து சூப் தயாரித்து பருக உணவு இலகுவில் ஜீரணமாவதுடன் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.



மணலிக் கீரை



மிளகு தக்காளி

### மிளகு தக்காளிக் கீரை

Solonum nigrom

மிளகு தக்காளிக் கீரையானது வாய்ப்புண், வயிற்றுப்புண், நாட்பட்ட வாத நோய்களுக்கு சிறந்த கீரையாகும். இதனைத் தனியாக கடைந்தோ/பருப்புச் சேர்த்துக் கடைந்தோ பயன்படுத்தலாம்.

மிளகு தக்காளிக் கீரையை வாரத்தில் 4 நாட்கள் சமைத்துச் சாப்பிட்டுவர மேற்கூறிய நோய்கள் தீரும். இலைக் கீரை கட்டிற்கு மிகச் சிறந்ததாகும்.

### மிளகு தக்காளிக் கீரைச் சூப்

- மிளகு தக்காளிக் கீரை - தேவையான அளவு
- பெருஞ்சீரகம் - 1/2 தே.க.
- தேங்காய்ப்பூ - 1/2 முடி
- மல்லி - 20 கிராம்
- வெந்தயம் - 5 கிராம்
- வெங்காயம் - 1/4 கப் (பொடியாக அரிந்தது)
- மஞ்சள் - சிறிய துண்டு
- உப்பு - தேவையான அளவு

முதலில் இலையை அலசி அம்மியில் மல்லி, மஞ்சள் மைபோல அரைத்துப் பின்பு தேங்காய், பெருஞ்சீரகம் வைத்து அரைக்கவும்.

பின் அம்மியைக் கழுவி அரைத்து விழுதை அரிசி களைந்த நீரில் போட்டுக் கரைத்து உப்புச் சேர்த்து அடுப்பில் கொதிக்க வைக்கவும்.

கொதி வந்ததும் வெங்காயம் போட்டு வைத்து வாசனை வந்ததும் இறக்கும் சமயத்தில் வெந்தயம் போட்டு 5 நிமிடம் கழித்து இறக்கவும்.

குடற் புண்ணுக்கு, வாய்ப் புண்ணுக்கு பயன் படுத்தலாம். (தொடரும்)

## பொது அறிவுத் தகவல்கள்

1. ஒரு தேனீயால் எத்தனை முறை கொட்ட முடியும் ?
   ஒரே ஒரு முறை.

2. கிரிக்கெட் விளையாட்டு எங்கு தோன்றியது ?
   இங்கிலாந்தில்.

3. வெப்பநிலை மானியை கண்டுபிடித்தவர் யார் ?
   சிக்ஸ்.

4. சட்டையை கண்டுபிடித்தவர்கள் யார் ?
   எகிப்து நாட்டவர்கள்.

5. முதல் இரும்புக் கப்பலைச் செய்தவர் யார் ?
   வில்கின்சன்.

6. காந்த துருவங்களை கண்டுபிடித்தவர் யார் ?
   ரோஸ்.


7. தீப்பெட்டியை கண்டுபிடித்தவர் யார் ?
   லேண்ட் டார்ம்.

8. தாய்லாந்தின் பழைய பெயர் என்ன ?
   சீயாம்.

9. கழுதை பந்தையம் நடக்கும் இந்திய மாநிலம் எது ?
   ராஜஸ்தான்.

10. கலீலியோ எந்த ஆண்டு தெர்மா மீற்றரை கண்டுபிடித்தார்?
    1593.

### உருவிலுள்ள 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்




## பழமொழிகள்

1. அறிந்து கெடுவதைவிட அறியாமல் கெடுவது மேல்.
2. திக்கற்றவர்களுக்கு தெய்வம் துணை.
3. அறையில் ஆடியபின் அம்பலத்தில் ஆடு.
4. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்பாது.
5. குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி மங்காது.




# புள்ளிமான்!



ஒரு காட்டில் ஒரு புள்ளி மான், ஒரு சிறு முயல், ஒரு நரி மூன்றும் நண்பர்களாக இருந் தன. ஒரு சமயம் புள்ளி மானைப் பார்ப்பதற்காக அதன் உறவினரான புள்ளிமான் ஒன்று வேறு காட்டிலிருந்து வந்து கொண்டிருந்தது.

அதை தற்செயலாகச் சிறு த்தை ஒன்று பார்த்தது. அதன் நாக்கில் நீர் ஊறியது. உடனே அது புள்ளிமானுக்குத் தெரியா மல் பின்தொடர்ந்து சென்று அது எதிர்பாராத சமயத்தில் அதை அடித்து வீழ்த்தி சுவைத்துத் தின்றது. இதை அக்காட்டில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு மரங்கொத்திப் பறவை பார்த்தது. அது உடனே விரைந்து சென்று புள்ளிமானிடம் தகவல் கூறியது.

"உன்னுடைய உறவுக்காரப் புள்ளிமான் சாவதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்பு தான் உன் பெயரை என்னிடம் கூறி, உன் இருப்பிடத்திற்கு எப்படிப் போக வேண்டும் என்று வழி கேட்டது. நான் தான் சொல்லி அனுப்பி னேன். ஆனால், உன்னுடைய எதிரியான அந்தச் சிறுத்தை இப்படிச் செய்யும் என்று எதிர் பார்க்கவில்லை. அது உனக்கு மட்டுமல்ல, இங்குள்ள ஏனைய சின்னச் சின்ன விலங்குகளுக் கும் கூட தீமையே செய்து வரு கிறது. அதை எப்படியாவது ஒழி த்துக் கட்டும் வேலையைப் பார். இல்லாவிட்டால் உன் குடும்பத்தைக் கூட என்றாவது ஒருநாள் கொன்று தின்று விடும்" என்று சொல்லி விட்டுப் பறந்தது.

மான் பெரிதும் கவலைப் பட்டுப் போயிற்று. அப்போது அதைப் பார்க்க முயலும் நரியும் வந்தது. மானின் சோகத்தைக் கண்டு "என்ன நடந்தது?" என்று கேட்டன.

மான், மரங்கொத்திப் பறவை கூறியதைக் கவலையுடன் கூறியது.

"அவ்வளவு பெரிய சிறுத் தையை நம்மால் எப்படித் தீர்த் துக் கட்ட முடியும்?" என்று கேட் டது மான். நரி பலத்த யோச னையில் ஆழ்ந்தது. பிறகு "நான் சொல்கிறபடி செய். நாம் அனைவரும் நலமாக இருக் கலாம். அந்தச் சிறுத்தையையும் ஒழித்துக் கட்டலாம்" என்று கூறியது.

பின், மானின் காதோடு காதாக அந்த இரகசியத்தைக் கூறியது. மான் மகிழ்ந்தது. மறுநாள் சிறுத்தையை நரி சந்தித்தது.

"சிறுத்தையாரே நலமா?" என்று நலம் விசாரித்தது.

"நலத்துக்கு ஒரு குறையும் இல்லை. என்ன இந்தப் பக்கம்?" என்று விசாரித்தது.

"காதில் கேட்ட ஒரு விடய த்தை உன்னிடம் சொல்லி விட்டுப் போகலாம் என்று வந் தேன். உனக்குப் பெரிய ஆபத்து காத்திருக்கிறது!" என்றது நரி.

"எனக்கா, ஆபத்தா? யாரிட மிருந்து? என்னை மிஞ்சியவன் இந்த காட்டிலிருக்கிறானா?" என்று அலட்சியமாகச் சிரித்தது சிறுத்தை.

"சரி, அப்படியானால் நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு நடக்க ஆரம்பித்தது நரி.

"நில்... சொல்ல வந்த விட யத்தைச் சொல்லி விட்டுப் போ!" என்று கூறியது சிறுத்தை.

"புள்ளிமானைத் தேடி அதன் உறவுக்காரப் புள்ளிமான் ஒன்று நேற்று இங்கே வந்திருக்கிறது. வரும் போது மரங்கொத்திப் பறவை ஒன்றிடம் புள்ளிமானின் விலாசத்தைத் தந்து விசாரித் திருக்கிறது. அதுவும் விலாச த்தைச் சொல்லி விட்டுச் சென்றி ருக்கிறது.

ஆனால், அது வரும் வழி யிலே, நீ அதை மடக்கிக் கொன்று தின்று விட்டாய். ஆகையினால் புள்ளிமான்கள் உன் மேல் கோபமாக உள்ளன. அவை உன்னை அழித்தே தீர வேண்டும் என்று சதியாலோச னையில் ஈடுபட்டு வருகின்றன.

நீயும் அசைவம், நானும் அசைவம் என்ற இனப்பற்றால் சொல்ல வந்தேன். நீயோ வர இருக்கும் ஆபத்தை அறியா மல் வீர வசனம் பேசிக் கொண் டிருக்கிறாய். எனக்கென்ன சொல்லுவதைச் சொல்லி விட் டேன். இனி அடுத்துச் செய்ய வேண்டிய பொறுப்பு உன்னு டையது!" என்றது நரி.

சிறுத்தை திடுக்கிட்டுப் போனது..."இவ்வளவு விபரத் தைச் சொன்ன நீ அவை எங்கே சதியாலோசனை நடத் துகின்றன என்பதையும் சொல லேன்" என்று கெஞ்சும் குர லில் கேட்டது.

நரி சிந்தனை செய்தது. "சரி என்னுடன் வா. நான் கூட்டிட்டுப் போகிறேன். ஆனால், நான் தான் காட்டிக் கொடுத்தேன் என்று நீ சொல்லிவிடக் கூடாது" என்ற நிபந்தனையுடன் அதை அழைத்துச் சென்றது.

காட்டின் நடுவில் ஒரு சின் னக் குன்றும், குகைப் பகுதியும் இருந்தன. அதன் முன்னிலை யில் மைதானம் போன்ற மணல் பரப்பு இருந்தது. அந்தக் குகையின் வெளிப் பக்கம் பார்த் தவாறு புள்ளிமானும் புள்ளி மான் குடும்பமும் பேசிக் கொண்டிருந்தன.

போதாதற்குச் சிறு முயலும் அதன் குடும்பமும் இருந்தன. குகை முழுக்க மிருகங்கள் இருப்பது போன்ற சூழ்நிலை காணப்பட்டது.

நரி ஒரு ஓரத்தில் மறைந்து நின்று அக்காட்சியைக்காட்டியது. சிறுத்தைக்கு நாவில் நீர் ஊறி யது.

"ஆகா ஒரே நேரத்தில் எத்தனை மிருகங்கள். அத்த னையையும் அடித்துக் கொன்று விடுவேன். அத்துடன் ஒரு மாதத்துக்குச் சாப்பாட்டுக்குக் கவலையில்லை" என்று நினைத்து, சிறுத்தை பதுங்கிப் பதுங்கிச்சென்று மணல் பகுதிக் குள் நுழைந்தது. அது மணல் பகுதியில்பூனை போலத்துள்ளிக் குதித்ததுதான் தாமதம், மணல் நறநறவென விலக ஆரம்பித் தது.

சிறுத்தை அடி எடுத்து வைப்பதற்குள் அதன் இர்ண்டு கால்கள் மணலில் புதைந் தன. அது ஆபத்தான புதை மணல் நிறைந்த பகுதி என்பது தெரியாமல் அதற்குள் சென்று மாட்டிக் கொண்டது சிறுத்தை. அதிலிருந்து விடுபட பலமாகக் கால்களை உதறியது.

ம்ஹூம்... மெல்ல மெல்ல சிறுத்தை உள்ளே சென்று மணலுக்குள் மூழ்கிப் போயி ற்று. அதைக் கவனித்துக் கொண்டிருந்த விலங்குகள் வெற்றிக் கூச்சலிட்டன. பின் நரி காட்டிய வேறு வழியின் மூல மாக தங்கள் தங்கள் இருப் பிடத்தை அடைந்து ஆனந் தமாக இருந்தன.

தீ புகையினால் சூழப்பட்டிருப்பது போன்றும் கண்ணாடி அழுக்கினால் மாசுபடுவது போன்றும் கருவை கர்ப்பப்பை சூழ்ந்திருப்பது போன்றும் இந்த உலகம் ஆசையினால் மூடப்பட்டிக்கிறது. ~ பகவத்கீதை

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

நம் தமிழ்மொழியின் சிறப்புக்கு அம்மொழியில் இடம்பெற்றுள்ள பழமொழிகளும் காரணமாகும்.

பழமொழிகள் கூறும் தத்துவங்கள் நிராகரிக்கப்பட முடியாத மெய்மைகள் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

பழமொழிகளைக் கற்றறிந்து அவற்றின் வழியில் நாம் வாழ்வோமாயின் அதுவே வையத்துள் வாழ்வாங்கு வாழும் அறமாகும்.

தவிர தமிழ்ப் பழமொழிகளின் உட்பொருளை நுணுகி ஆராய்ந்தால், பாவத்தினின்றும் விலகி தர்மத்தின் வழியில் நடப்பதன் அவசியம் அங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த வகைப்பட்ட பழமொழிகள் பல உண்டு.

*அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்* என்ற பழமொழியில் அரசன் அன்றறுப்பான் என்பதற்குள் மன்னன் இம்மியும் பிசகாமல் அறத்தைப் பின்பற்றி தீர்ப்பை வழங்குவான். அவனின் தீர்ப்பில் எந்த வழுவும் இருக்காதென்ற நம்பிக்கை வெளிப்படுகிறது.

அதேநேரம் தெய்வம் நின்றறுக்கும் என்பதற்கு நாம் புரிந்து கொண்ட பொருள்; கடவுள் காலம் தாழ்த்தியே தண்டிப்பான் என்பதாகும்.

மேற்போந்த பொருள் உணர்தல் ஏற்புடையதாயினும் இதனைக் கடந்தும் இன்னுமோர் பொருள் உண்டென்பது உணர்தற்குரியது.

அதாவது ஒருவன் செய்த குற்றத்துக்கு – பாவகாரியத்துக்கு அரசன் தண்டனை வழங்காவிட்டாலும் அல்லது அரசனின் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொண்டாலும் தெய்வம் அதற்குரிய தண்டனையை காலம் தாழ்த்தியேனும் வழங்கும் என்ற பொருளும் உண்டென்பது ஏற்புடையது.

இந்தப் பழமொழியின் பொருளை உணரும் போதுதான், தமிழ் அரசியலில் நடக்கும் கூத்துக்களுக்குத் தண்டனை வழங்கப்படுவது தெரியவருகிறது.

ஆம், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்தபோது அவரைக் குழப்புவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இயக்கவல்லவர்கள் தமது க்ட்சி சார்ந்த மாகாண சபையின் இளம் உறுப்பினர்கள் சிலரைப் பயன்படுத்தினர்.

அவர்களும் அறம் மறந்து, தமக்கு வாக்களித்த தமிழ் மக்களை மறந்து நீதியரசர் விக்னேஸ்வரனைக் கடுமையாகத் துன்பப்படுத்தினர்.

ஆனால் இப்போது அதற்குரியதை அனுபவிக்கின்ற நேரம் வந்துவிட்டது.

யார் தங்களை ஓரங்கட்டமாட்டார்கள் என்று கூட்டமைப்பை இயக்கவல்லவர்கள் நினைத்தார்களோ அந்த நினைப்புத் தலைகீழாயிற்று.

பாராளுமன்றப் பதவி இல்லாமல் போய் தேர்தல் வந்தக்கால், எப்படியும் வெட்டி விழுத்த வேண்டும் என்று உள்ளிருந்து ஒருபகுதி கங்கணம் கட்டி நிற்கிறது.

இப்போதுதான் தெரிகிறது நீதியரசர் விக்னேஸ்வரன் உடன் இருந்து இப்படிச் செய்யார் என்ற உண்மை.

என்ன செய்வது முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற பழமொழி இவ்விடயத்தில் முந்திக் கொள்கிறது.

# நாட்டின் சுயாதீனத்தன்மையை விட்டுக்கொடுத்து அமெரிக்காவுக்கு அடிபணியமாட்டோம்

## எம்.சி.சி. ஒப்பந்தம் குறித்து கம்மன்பில

(கொழும்பு)

எக்காரணத்தைக் கொண்டும் அமெரிக்காவுடன் எம்.சி.சி.ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். இந்த ஒப்பந்தம் இலங்கையில் இறையாண்மைக்கும், தேசியப் பாதுகாப்புக்கும் முரணானது என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்க தேசிய பாதுகாப்பு தரப்பினருக்கு தெரிவித்துள்ளார் என பிவிதுறு ஹெல உறுமய அமைப்பின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுத்தேர்தல் முடிந்தவுடன் அரசாங்கம் அமெரிக்காவுடன் எம். சி. சி.ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதாக எதிர்த்தரப்பினர் குறிப்பிட்டுக் கொண்டு அரசியல் பிரசாரம் செய்கிறார்கள். இந்த ஒப்பந்தம் இலங்கையின் இறையாண்மைக்கு முரணானது என்பதை ஜனாதிபதி தேர்தல் காலத்தில் தெளிவாக எடுத்துக்காட்டினோம்.

இதன் பிரகாரம் நாட்டுக்கு எதிராக ஒப்பந்தங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டார்.

அமெரிக்காவுடனான எம்.சி.சி.ஒப்பந்தத்தை இரகசியமான முறையில் கைச்சாத்திட்டுக் கொள்ளும் தேவை கடந்த அரசாங்கத்திற்கு குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீரவிற்கு இருந்தது.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலை தொடர்ந்து இந்த ஒப்பந்தம் இரகசியமான முறையில் கைச்சாத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அதற்கு அப்போதைய எதிர்க்கட்சியாக செயற்பட்ட பொதுஜன பெரமுன இடமளிக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. பல்வேறு தரப்பினரது விமர்சனங்களுக்குள்ளான எம். சி.சி. ஒப்பந்தம் தொடர்பில் ஆராய ஜனாதிபதி கடந்த ஜனவரி மாதம் லலித் ஸ்ரீ குணவர்த்தன தலைமையில் பல்கலைககழக வேந்தர்கள், துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவை நியமித்தார். குழுவின் முதற கட்ட அறிக்கை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எம்.சி.சி. ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கும், இறையாண்மைக்கும் முரணானது என்பது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதை ஜனாதிபதி அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு தரப்பினருக்கு எடுத்துரைத்துள்ளார். குழுவின் அறிக்கையின் முதல் பகுதியே முரண்பட்டதாக அமையும்போது முழுமையான உள்ளடக்கம் எவ்வாறு அமையும் என்பதை யூகித்துக் கொள்ள முடியும்.

அமெரிக்கா ஒரு நாட்டுக்கு நேசக்கரம் நீட்டுகின்றது என்றால் அந்நாட்டின் அழிவு ஆரம்பம் என்றே கருத முடியும். ஆகவே எமது நாட்டின் சுயாதீனத்தன்மையை விட்டுக் கொடுத்து அமெரிக்காவிற்கு அடிபணிய வேண்டிய தேவை எமக்கு கிடையாது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் பாரியளவில் கடன்பட்டுள்ளது

## நிறுவனத் தலைவர்

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் ஒரு பில்லியன் டொலர் வரை கடன்பட்டுள்ளதாகவும் அதில் பெருந்தொகை பணம் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் அசோக் பத்திரகே தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கிக்கு 220 மில்லியனும், மக்கள் வங்கிக்கு 187 மில்லியனும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு 275 மில்லியனும் பிரதானமாக செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் கடன் தொகை 130 மில்லியனாக காணப்பட்டதாகவும் தற்போது கொரோனா அச்சுறுத்தல் காரணமாக விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால் பாரிய நட்டத்தை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** சாவகச்சேரி தபாலக வீதி, டச்சு வீதி கண்டுவில், அரசடி ஆசிரியர் வீதி, பெருங்குளம் சந்தி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** துட்டுவாகை ஒரு பகுதி, கூமாங்குளம் கிராமம், கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, கிறிஸ்தவகுளம், வவுனியா நகரம் ஒரு பகுதி, பஸார் வீதி, 1ம் குறுக்குத் தெரு, 2ம் குறுக்குத் தெரு, இலுப்பையடி, சூசைப் பிள்ளையார்குளம், கொறவப் பொத்தானை வீதி, இறம்பைக்குளம், ஹோட்டல் ஓவியா, எஸ்.வி.ஆர். அரிசி ஆலை, ராணிஅரிசிஆலை, லங்கா அரிசி ஆலை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** மாலுவாடி, New Silk Road Aquatic Company PVT (Ltd) ஆகிய பிரதேசங்களிலும், மன்சாரம் தடைப்படும்.

# நீராடச்சென்ற சிறுவன் பலி!

(காலி)

காலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிங் ஓயாவில் நீராடச் சென்ற 13 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான். மீஎல்ல, ஹக்மன பகுதியைச் சேர்ந்த சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

நேற்று முன்தினம் குறித்த சிறுவன் தனது தாய், தந்தை மற்றும் சகோதரியுடன் உறவினர் வீட்டிற்கு சென்று நீராடச் சென்ற சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் காலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுக்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ அவற்றையே மனத்தில் இருத்துங்கள். -பிலிப்பியர்

# ஆன்மீகச் சிந்தனைகள்

## நெஞ்சில் அன்பு வை

❖ பிறர் படும் துன்பத்தைக் கண்டு வருந்துவதோடு, உதவ முன்வருவதே அறிவு இருப்பதன் அடையாளம்.

❖ துன்பத்தில் கொடிய துன்பம், கடனாளியாக வாழ்வதே. இருப்பதைக் கொண்டு நிறைவாக வாழ முயல வேண்டும்.

❖ நீண்டநாள் வாழ்வதைக் காட்டிலும், இருக்கும் வரை ஆரோக்கியத்துடன் வாழ்வதே நல்லது.

❖ கடவுளிடம் அன்பு வைக்க வேண்டுமே தவிர, ஒருபோதும் ஆசை வைப்பது கூடாது.

❖ உருகிய தங்கத்தில் நவமணிகள் பதிவது போல, உருகிய உள்ளத்தில் கடவுளின் அருள் பதிந்து விடும்.

# நாடாளுமன்ற அமர்வுகள் டிஜிற்றல் முறையில்

(கொழும்பு)

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் குழு அமர்வுகளை டிஜிற்றல் தொழில்நுட்பத்தினூடாக முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்துள்ளார். இதற்கான இயலுமை மற்றும் தொழில்நுட்ப ரீதியான குறைபாடுகளைக் கண்டறிந்து கொள்வதற்கான ஒத்திகை அமர்வொன்று நாடாளுமன்ற குழு அறையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க, பிரதி செயலாளர் நாயகமும் பணியாட் தொகுதி பிரதானியுமான நீல் இத்தவெல மற்றும் நாடாளுமன்ற சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் நாடாளுமன்றத்துக்கு வருகை தராமல் டிஜிற்றல் தொழில்நுட்பம் ஊடாக ஒன்லைன் மூலம் குழு அமர்வுகளில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்படும்.

மேலும் நாடாளுமன்ற அமர்வுகள் இல்லாத தினத்தில் இடம்பெறும் குழு அமர்வுகளின் போதும் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு நேரடியாக சமுகமளிக்காது டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் ஊடாக குழு அமர்வுகளில் பங்கேற்கும் வகையில் இதனைப் பயன்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது என அவர் தெரிவித்தார். (ஜ-8)

## வெலிசறை கடற்படை முகாம் திறக்கப்பட்டது

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக மூடப்பட்டிருந்த வெலிசறை கடற்படை முகாம் மீண்டும் திறக்கப்பட்டது.

சுகாதாரப் பாதுகாப்பு வழிபாட்டல்களுக்கு அமைய வெலிசறை கடற்படை முகாம் நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.


வெலிசறை கடற்பண்ட முகாமைச் சேர்ந்த கடற்படை வீரர்கள் பலர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையிலேயே குறித்த கடற்படை முகாம் கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி முதல் மூடப்பட்டது. இந்நிலையிலேயே நேற்று வெலிசறை கடற்படை முகாம் மீண்டும் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# பல மனித படுகொலைகளுக்கு கருணாவே காரணம்

## அஸ்கிரியபீடம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கருணா அம்மான் மூவாயிரம் இராணுவத்தினரை மாத்திரமல்ல, அரந்தலாவை பிக்குகள் கொலை உள்ளிட்ட பல மனித படுகொலைகளுடன் தொடர்புபட்டுள்ளமை ஏற்கனவே அறிந்த விடயங்கள் தான். எனவே அவர் குறித்து கருத்துரைப்பது அநாவசியமானது என அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்க மெதகம ஸ்ரீ தம்மானந்த தேரர் தெரிவித்தார்.**



சுமார் மூவாயிரம் இராணுவத்தினரை ஒரே இரவில் கொன்றதாக கருணா அம்மான் கூறிய விடயங்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் சமூகத்தில் மீண்டும் வீண் பிரச்சினைகள் உருவாக இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றமை தொடர்பில் அஸ்கிரிய பீடத்தின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவிக்கையில்,

கருணா அம்மான் பல மனிதப் படுகொலைகளுடன் தொடர்புடையவர் என்பது அனைவரும் முன்னரே அறிந்த விடயமாகும். ஆனால் அவர் அதனை தற்போது பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு கூறுவதற்கான நோக்கம் என்ன என்பது பற்றி எம்மால் கற்பனை செய்ய முடியாது. இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டாலும் அவர் மனம் திருந்தியிருப்பார் என்று எண்ணியே சமூகத்தில் சுதந்திரமாக நடமாடுவதற்கும் அரசியலில் ஈடுபடுவதற்கும் இடமளிக்கப்பட்டது. ஆனால் அவர் தற்போது என்ன நோக்கத்தில் செயற்படுகின்றார் என்று எம்மால் கணிப்பிட முடியாது.

பெரும்பாலான அரசியல் தலைவர்களும் அரசியல்வாதிகளும் இதனையே செய்கின்றனர்.

ஆனால் நாம் அவரது கருத்துக்கள் தொடர்பில் எதிர்ப்பினையோ அல்லது 'அறிக்கைகளையோ வெளியிட்டு அவர் பின்னால் சென்று நேரத்தை வீணடிக்கவும் அவரை பிரபலப்படுத்தவும் விரும்பவில்லை.

இதுவே எமது நிலைப்பாடாகும். எவ்வாறிருப்பினும் தற்போதைய அமைதியான சூழலில் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது பொருத்தமானதல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2057

**சுபாஸ்**



அதிவிரைவில் கோபப்பட்டு அதே வேகத்தில் வேதனை கொள்ளும் இதயம் மனிதப் பண்புகள் நிறைந்த மனிதனுடையது ஆகும்

**மணி**



என்னதான் நரிக்கு நாய் வேஷம் போட்டாலும் நரி நன்றியோடு இருக்காது. அதற்கு குழி பறிக்க மட்டும்தான் தெரியும்

**கஜன்**



வழிகள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. வலிகளோடு வாழ வலிமை இருந்தால் போதும் வாழ்க்கை வாழ்வதற்கே

**சிவானி**



வரதட்சணையாக என்னென்ன கொண்டு வந்தாயென புதுமருமகளிடம் கேட்கும் இந்த உலகம் எதையெல்லாம் நீ இழந்துவிட்டு இங்கு வந்தாயென கேட்கமாட்டார்கள்

**ராஜினி**



உரிமை இருக்குன்னு போடுற சண்டைகளை விட உரிமைக்காக போடுற சண்டைகள் அன்பின் ஆழும்

**கம்சா**



யாருடைய உதவியையும் நம்பி உன்னுடைய முன்னேற்றத்தை தொடங்காதே, உன்னுடைய உழைப்பைத் தவிர

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## முல்லையில் விப...

வீதி விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் உயிரிழந்த இளைஞன் ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் தனது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது நெல் ஏற்றி வந்த பார ஊர்தி ஒன்றுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சிலையடி கற்சிலைமடு ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த தங்கராசா ஜெனிபன் (வயது - 29) என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (ம-3,281)

## யாழ்.நகரில்...

ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

பலாலி பிரதான வீதியும், பருத்தித்துறை வீதியும் இணையும் சிறாம்பியடிச் சந்தியில் நேற்றுக் காலை 07.30 மணியளவில் மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் பல்வேறு பீடங்களிலும் பணியாற்றும் உத்தியோகத்தர்களை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு ஏற்றிச் சென்ற பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்படி சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பண்டத்தரிப்பு பற்றிமா வீதியைச் சேர்ந்த அருளப்பு சிறிசோலோகு (வயது-50) என்ற பாதுகாப்பு உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார். (ம-3,18)

## கஞ்சாவுடன்...

கையின்போதே இவ்வாறு இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 220 கிராம் வரையிலான கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்டவர்கள் முள்ளியவளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## யாழுக்கு...

மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வரும் சஜித் பிரேமதாஸ வேட்பாளர்களையும் பொதுமக்களையும் சந்திக்கவுள்ளார். (ம-3,8)

## கொடிகாமத்தில்...

இனந்தெரியாத நபர்கள் வாள்வெட்டினை மேற்கொண்டுவிட்டுத் தப்பித்துச் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் அல்லாரைப் பகுதியைச் சேர்ந்த குஞ்சுராசா அஜந்தன் (வயது-40) என்பவரே வாள்வெட்டிற்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3,30,60,114)

## மகனைத் தேடிய...

ழந்துள்ளார்.

2008ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனான விக்கினேஸ்வரன் என்பவரைத் தேடி வந்த செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு (வயது-69) என்ற தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று இடம்பெறவுள்ளது. (ம-3,299)

## தமிழர்களுக்கு...

குருநாகல் - நிகவெள பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பல தரப்பட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டை பிளவுப்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது. பாரிய போராட்டத்திற்கு மத்தியில் 30 வருட கால யுத்தம் தோற்கடிக்கப்பட்டு நாட்டின் இறையான்மை பலப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டை பிளவுபடுத்தாத வகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க தயாராக உள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் பல வருட காலம் சேவையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அங்கு வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நன்கு அறிவார். தேசிய பொருளாதாரத்தை முன்னேற்றினால் மக்கள் மத்தியில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கு தீர்வு காணலாம் என்றார். (ம-3)

## தேர்தல் கடமை...

சால் முடியவில்லை என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

கொரோனா வைரஸ் தொடர்பான நடவடிக்கைகள், தொற்று நோய்கள் மீதான தடுப்பு முயற்சிகள் மற்றும் தேர்தல் தொடர்பான கடமைகள் ஆகியவற்றிலிருந்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை முதல் விலகுவர் என்று பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. (ம-3)

## 40 பேருக்கு...

விலிருந்து நாடு திரும்பியவர்கள்.

நாட்டின் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 1,991 ஆக உயர்ந்துள்ளது. (ம-3)

## அநுராதபுர மன்...

களத்தால் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில் மன்றில் இன்று சரணடைந்த விண்ணப்பதாரியை வரும் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-3)

## இளம் யுவதி...

உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் ஆவரங்கால் கிழக்கு புத்தூர் பகுதியைச் சேர்ந்த உலகேந்திரம் விதுசியா (வயது 23) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

கடந்த 21ஆம் திகதி தீக்காயத்திற்குள்ளான குறித்த யுவதி உடனடியாக அச்சுவேலி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## மக்கள் பணத்தை...

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் உரித்தான பணத்தை தங்களுடைய சொந்த தேவைக்காக எடுக்கும் பழக்கம் ராஜபக்ஷாக்களுக்கு இருக்கலாம். ஆனால் எமக்கு அந்த பழக்கம் இல்லை என நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக நேற்று யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த சி.வி.விக்னேஸ்வரனிடம் வடக்குக்கு அனுப்பிய பணத்தை திருப்பி அனுப்பியவர் இப்போது மக்களிடம் பணம் கேட்கிறாரா?

என பத்திரிகை ஆசிரியர்களுடனான கலந்துரையாடலில் ஜனாதிபதி கேட்டது தொடர்பாக கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மாகாண சபை காலத்தில் எங்களிற்கு அனுப்பிய பணம் எதுவும் திருப்பியனுப்பப்படவில்லை. ஆனால் அவர்களின் அமைச்சர்களிற்கு அனுப்பிய பணத்தை செலவிடாமல் எமது தலையில் கட்டிநாரோ தெரியவில்லை. இவ்வாறான விமர்சனங்கள் வைக்கப்படுவதற்கு உள்ள காரணம் அச்சம்.

மக்களிடம் பணம் பெறும்போது, அவர்களிற்கு சேவை செய்யும் தார்மீக கடப்பாடு வேட்பாளர்களிற்கு அதிகரிக்கும். மக்களால் முடிந்த சிறிய, பெரிய அளவிலான உதவியை கோருகிறோம்.

அதற்கான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படும். பணத்தை வழங்கிய மக்களே நாளை உரிமையுடன் எமது குறைகளை சுட்டிக் காட்டுவார்கள். மக்களிற்காக சேவை செய்ய மக்களிடம் பணம் கேட்பதில் தவறில்லை யென்பதே எமது நிலைப்பாடு என்றார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## தயாரிப்பாளர் தவறான முடிவு

(வோஷிங்டன்)

பிரபல ஹொலிவுட் திரைப்பட தயாரிப்பாளரும், கொடையாளருமான ஸ்டீவ் பிங் (வயது-55) 27ஆவது மாடியிலிருந்து குதித்து அவர் உயிரை மாய்த்துள்ளார்.

மனச்சோர்வு காரணமாக இந்த முடிவை எடுத்திருக்கலாமென கூறப்படுகிறது. (ம-3)

மெகா பவர்
திகதி 23/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 532
I 25 06 29 56 70

நீரோகா
திகதி 23/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0681
லக்கினம் வெற்றி இலக்கங்கள்
துலாம் 12 23 32 57

மஹஜன சம்பத
திகதி 2020/06/23
சீட்டிழுப்பு இலக்கம் 4163
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
W 5 4 4 6 4 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 23-06-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2457
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
O 26 44 57 80
தேசிய லொத்தர் சபை

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1666
சீட்டிழுப்பு திகதி 23/06/2020
வெற்றி இலக்கங்கள் 01 12 42 59
ஆங்கில எழுத்து I
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.49,586,396
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2840
வர்ணம் சிவப்பு
திகதி 23.06.2020
வெற்றி இலக்கங்கள் 02 44 46 61
விருச்சிகம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,817,670
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 959
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.06.23
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 64,630,395/-
வெற்றி இலக்கங்கள் 05 12 23 53
ஆங்கில எழுத்து T


சீட்டிழுப்பு இலக்கம் 589
திகதி 23.06 2020
T 23 33 49 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,402,970
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## கொரோனாவின் பின்னரான சீட்டிழுப்பின் வெற்றியாளர்கள்

- கடந்த 2020.03.21ம் திகதிக்குரிய NLBயின் கொவிசெத சீட்டிழுப்பில் 3 இலக்கங்களும் ஆங்கில எழுத்தும் பொருந்தியதில் (V-13-61-76) இளவாலைப் பகுதியைச் சேர்ந்த அதிர்ஷ்டசாலி ஒருவர் ஒரு இலட்சம் ரூபாவை வென்றுள்ளார்.
- கடந்த 2020.06.08ஆம் திகதிக்குரிய DLBயின் விசேட சனிதா சீட்டிழுப்பில் 3 இலக்கங்களும் ஆங்கில எழுத்தும் பொருந்தியதில் (O - 48 - 60 - 65) ஏழாலையைச் சேர்ந்த அதிர்ஷ்டசாலி ஒருவர் ஒரு இலட்சம் ரூபாவை வென்றுள்ளார்.

(C-9749)

DLB 09-9060 | நடராஜா வசீகர் பிரதான முகவர், சுன்னாகம் | NLB N220063



## மக்களிடம் பணம் கேட்பதில் தவறில்லை

# செல்வந்தர்களிடம் பணம் வாங்கி கைப்பொம்மையாகத் தயாரில்லை

## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**மக்கள் அரசியல் செய்வதற்கு மக்களிடம் பணம் கோருவதில் தவறில்லை. அது மக்களிற்கு சேவை செய்யும் பொறுப்புணர்வை வேட்பாளர்களிடம் அதிகரிக்கச் செய்யும். வெளிநாட்டுக்குச் சென்று அங்குள்ளவர்களிடம், உள்ளூரில் பெரும் பணக்காரர்களிடம் பணம் சேர்த்து அவர்கள் கைப்பொம்மையாக செயற்படத் தயாரில்லையென தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

**கேள்வி :- தேர்தல் நடவடிக்கைக்கு மக்களிடம் நிதி உதவி கோரியதை ஏனைய தமிழ்க் கட்சிகள் விமர்சிக்கின்றனவே?**

பதில் :- இது அச்சத்தின் அடிப்படையிலான விமர்சனம். எமது மக்களுக்கான அரசியல் போராட்டத்துக்கு மக்களிடம் நிதி உதவி கேட்பதை விமர்சிப்பதற்கு என்ன இருக்கிறது? தேர்தலுக்காக நாம் எவரிடமும் பின் கதவுகளின் ஊடாக பணம் வாங்கி எமது மக்களின் உரிமைகளை அடைமானம் வைக்கவில்லை. அதனால் எம்மிடம் பணம் இல்லை. அதனால் வெளிப்டையாகவே எமது அரசியலை ஆதரிப்பவர்களிடமும் எம்மை நம்புபவர்களிடமும் உதவி செய்யுமாறு கூறினேன். இதில் கூச்சப்படவோ வெட்கப்படவோ எதுவும் இல்லை. "நக்கினார் நாவிழந்தார்" என்பது ஒரு பழமொழி. இதுதான் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு நடந்தது. இந்தத் தவறை நான் செய்யப் போவதில்லை. அதனால் தான் எமது மக்களிடம் உதவி கோரினேன். இதன் மூலம் நாம் மக்களுக்கு பொறுப்பு கூற கடமைப்படுகிறோம். இது மிகவும் முக்கியமானது. எந்த ஒரு காரியத்தையும் செய்யும் போதும் எமது மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தும் தார்மீக பொறுப்பு இதனால் எம்மை வந்து சேர்கிறது. அதே போல, எமது வெற்றியின் பங்காளிகளாக எமது மக்கள் இருப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் இதன்மூலம் அமைகிறது. இது எம்மை கேள்வி கேட்கும் அவர்களின் உரிமையை மேலும் வலுப்படுத்துகிறது. மக்கள் நலனை முன்னிறுத்தி அரசியல் செய்யும் கட்சிகள் பொதுமக்களிடம் நிதி உதவி கோருவது பல நாடுகளிலும் நடைபெறும் ஒருநிகழ்வுதான். உதாரணமாக, கடந்தவருடம் பிரித்தானியாவில் நடைபெற்ற தேர்தலில் செலவுகளுக்காக ஜெரமி கோர்பின் தலைமையிலான தொழிற்கட்சி " சிலருக்காக அன்றி, பலருக்காக " ( For the many,not the few) என்ற கோட்பாட்டை முன்னிறுத்தி சாதாரண மக்களை நாடிச் சென்றிருந்தது. ஆகவே, நான் முதலில் கூறியபடி,மக்களிடம் நிதி உதவி கோரியமை தொடர்பில் வெளிவரும் விமர்சனங்கள் எல்லாம் அச்சத்தின் வெளிப்பாடுகளே.

**கேள்வி :- கூட்டமைப்பினை குறை கூறுவதை விட தாங்கள் கட்சியிடம் மக்களிற்கு சொல்ல ஏதுமில்லை என்கிறதே கூட்டமைப்பு?**

பதில் :- நாம் வெறுமனே விமர்சனம் செய்யவில்லை. எம்மிடம் மாற்று வழிகள் இருக்கின்றன. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பிழைவிடும் போது அவற்றை அவர்களுக்கு சுட்டிக்காட்டுவதும் மக்களுக்கு எடுத்துச் சொல்வதும் முக்கியமானது.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியில் இணைந்துள்ள கட்சிகள் தயாரித்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் மேற்கொள்ளவிருக்கும் சில நடவடிக்கைகள் பற்றி குறிப்பிட்டுள்ளோம்.

தமிழ் மக்கள் இன்று நடுத்தெருவில் நிற்பதற்கு காரணம்,தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஒரு சிலர் தாம் நினைத்தபடி முடிவுகளை எடுப்பதும் எந்தவிதமான ஆராய்வுகளும் இன்றி அவற்றை நடைமுறைப் படுத்தி வந்ததும் தான்.

உலகின் ஆதிக்குடிகளில் ஒன்றான எமது இனத்தின் பிரச்சினை தொடர்பில் எவ்வாறு ஓரிரு நபர்கள் தாம் நினைத்தபடி முடிவுகளை எடுக்க முடியும்? இது எத்தனை ஆபத்தானது? ஆகவே, கூட்டமைப்பு செயற்பட்டது போல தமிழ் மக்களின் எதிர்காலத்தை தனி ஒருவர் தீர்மானிக்கும் வகையில் நாம் செயற்படமாட்டோம்.

அதேவேளை,எமதுஅரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளை பெறுவதற்காக பாராளுமன்ற அரசியலை காத்திரமான முறையில் நாம் மேற்கொள்வோம். ஆட்சியில் எந்த அரசாங்கம் இருந்தாலும் எமது மக்களின் நலன்களை கவனத்தில் கொள்ளாமல் அவற்றுக்கு நாம் ஒருபோதும் முண்டு கொடுக்கமாட்டோம். சந்தர்ப்பங்கள் கிடைத்தால் எமது மக்களின் நலன்களை முன்வைத்து நாம் பேரப்பேச்சுக்களில் ஈடுபடுவோம். ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு கோரி வந்தார்கள். சில நிபந்தனைகளை முன்வைத்தேன். தயங்கினார்கள். அப்படியானால் என்னாலும் முடியாது என்று கூறிவிட்டேன். சென்றுவிட்டார்கள். ஆகவே, மேற்கூறிய அடிப்படைகளிலேயே எமது மக்களின் உரிமைகளை அடைவதற்கான எமது அணுகுமுறை ஏனைய எல்லா கட்சிகளையும் விடவும் மாறுபட்டு காணப்படுகின்றது.

**கேள்வி :- வட-கிழக்கில் பெண் விகிதாசாரம் தேர்தல் அரசியலில் பேணப்படுவதில்லையென்ற குற்றச்சாட்டு பற்றி?**

பதில்:-எமது கூட்டணியில் யாழில் அனந்தியும் மீராவும் போட்டியிடுகின்றனர். வன்னியில் முன்னைய கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் போட்டியிடுகின்றார். திருகோணமலையில் கண்மணி அம்மா போட்டியிடுகின்றார். தேர்தலில் போட்டியிட பெண் சகோதரிகள் முன்வர வேண்டும். வந்தால் மாகாணசபைத் தேர்தலில் அவர்களை நிறுத்துவோம். பெண்களுக்கு சம உரிமையும் சம அந்தஸ்தும் சம வாய்ப்பும் அளிப்பதில் நாம் மிகுந்த ஆர்வமாக இருக்கிறோம். மீனாட்சி (மீன்+ஆட்சி) நடத்த நாம் அவர்களை வரவேற்கின்றோம். மீனாட்சிக்கு அவர்கள் முற்றிலும் உகந்தவர்கள் என்பது என் கருத்து என்றார். (ம-3)


### பிரத்தியேக வகுப்புக்கள்

தமிழ் வகுப்புக்கள் Gr 6 - 11 வரை
வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
வரலாறு, புவியியல், குடியுரிமை
பாடங்களும் கற்பிக்கப்படும்.
(3092) ஆசிரியர் : K.குகன்
076 454 5709

### வீடு வாடகைக்கு

வீடு சகல வசதிகளுடன்
தாவடிச் சந்தியில் இருந்து
50m தூரத்தில் உள்ளது.
உத்தியோகத்தர்களுக்கு
முன்னுரிமை. விபரங்களுக்கு.
(3091)
தொடர்பு : 077 817 9083

### இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
இரத்தினசாமி அவர்கள்
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை
மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில்
பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில்
தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும்.
(2969)
முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703, 076 682 7368
இல.101, Kandy Rd, jaffna (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்).

### வயல் காணி விற்பனைக்கு

பரந்தனில் 10 ஏக்கர்
வயல் காணி விற்பனைக்கு
உண்டு.
தொடர்புக்கு (3094)
077 511 5819

### வேலைவாய்ப்பு

ஆசிய நாடுகளில் வியாபித்துள்ள எமது கம்பனியானது கடந்த இரு ஆண்டுகளாக வடமாகாணத்தில் தமது செயற்பாட்டை நிர்வகித்து வருகின்றது. பல கிளை நிறுவனங்களை ஆரம்பிப்பதற்காக வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மறறம் யாழ். நகரில் இருந்து பணியாட்கள் நியமிக்கப்படவுள்ளனர். (3090)

| வெற்றிடங்கள் | தகைமை | வெற்றிடங்கள் | தகைமை |
|---|---|---|---|
| • வரவேற்பாளர் | A/L | • மேற்பார்வையாளர் | O/L, A/L |
| • நிர்வாக பிரதிநிதி | A/L | • விநியோகிப்பாளர் | 10th தரம், O/L |

தொடர்புகளுக்கு : 077 157 1699

### மலிவு விற்பனை

SILVER SHIELD SOCKS - காலுறைகள்
MASK - முகக் கவசம்
பாடசாலை மாணவர்களுக்கு
விசேட விலைக்கழிவு (C-9748)
021 222 5392

### மீண்டும்



வெளிநாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
(C-9742)

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்



இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

### வேலைவாய்ப்பு

**தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருப்பவரா?**
உங்கள் திறமைக்கான தொழில் வாய்ப்பை வழங்க நாங்கள் தயாராகவுள்ளோம். எமது நிர்வாகத் துறையில் இணைந்து நாளாந்தம் 750 - 1500 ரூபாவினையும் மாதாந்தம் 20000 - 25000 ரூபாவினையும் பெற்றுக் கொள்வதோடு EPF, ETF தங்குமிடவசதிகள் ஒழுங்கமைத்துத் தரப்படும். இணைய விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 076 939 3965 (3093)

### விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு
பொதிகளை எமக்கூடாக
அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
• நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
• மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(9624)
0768226240


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.